Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම KANNOTTAM

வெளியீடு - 12 | 10 மார்ச் 2001 | விலை:- 10.00

தன்னைத் தவிர மற்றெல்லோர் மீதும் விரோதத்தையும் குரோதத்தையும் வெஞ்சினத்தையும் அள்ளி வீசும் போக்கு இறுதியில் அந்தன்னையும் அழித்துவிடும்.

# புலிகளின் மேல் பிடி இறுகுகிறது

# பிரித்தானியா கையில் சவுக்கு

பலராலும் தத்தமது நலன்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் பலரது எதிர்ப்பார்ப்புக்களை நிறைவேற்றாவிட்டாலும் முக்கால் கிணறு தாண்டிவிட்டதாகவே கருதவேண்டியிருக்கிறது. அதுதான் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் உள்துறை அமைச்சரால் சிபாரிசு செய்யப்பட்ட 21 பயங்கரவாத இயக்கங்களின் பெயர்ப்பட்டியலில் புலிகள் இயக்கமும் [illegible]ம் பெற்றது. அதுவும் மூன்[illegible]வதாக.

உலகின் எப்பகுதியிலும் கடந்த காலத்திலோ நிகழ் காலத்திலோ பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள், ஈடுபடுபவர்கள் எப்போது வேண்டுமானாலும் தடை செய்வதற்கு இச்சட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பிரிட்டனில் நிதி சேகரித்தல், பிரச்சாரத்தில் ஈடுபடுதல் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்தச் செயற்பாடுகளில் ஈடுபடும் ஸ்தாபனங்




பெப்ரவரி 19ம் திகதி பயங்கரவாதத் தடைச்சட்டம் 2000 பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இப்போது பெயர்பட்டியலை சிபாரிசு செய்துள்ளது. பல இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்கள், ஹமாஸ், பி.கே.கே. உட்பட 21 இயக்கங்கள் இதற்குள் அடங்குகின்றன.

அரசியலுக்காகவோ, மதங்களுக்காகவோ, சில கோட்பாடுகளை நிலை நிறுத்துவதற்காகவோ வன்முறையில் ஈடுபடுவது பயங்கரவாத நடவடிக்கையாகக் கருதப்படும்.

என இச்சட்டம் வரையறுத்துள்ளது.

களை பிரிட்டன் தடை செய்யவும், சொத்துக்களை முடக்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

புலிகள் தடை செய்யப்பட்டால் அவர்கள் உண்மையான பயங்கரவாதிகளாக மாறுவதற்கு வழிவகுக்குமென புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார். அத்துடன் தான் பிரிட்டனில் சீவிக்க முடியாது போகும் என்று கவலை தெரிவித்தார், புலிகள் சமாதான முயற்சிகளிலிருந்து பின்வாங்க நேரிடும் என்றும் புலிகள் உண்மையான பயங்கரவாத இயக்கமாக மாற நேரிடும் என்றும் பலதும் பத்துமாக ஒன்றுக்



கொன்று முரணாகவும் அறிக்கைகள் வெளியிட்டார். இது புலிகள் பதறிப்போனதையே காட்டுகிறது.

அதேவேளை சிறிலங்கா அரசாங்கமும் தன்பங்குக்கு "பிரிட்டன் புலிகளைத் தடை செய்யவில்லை என்றால் பிரிட்டனுடனான இலங்கையின் ராஜ தந்திர உறவுகள் பாதிக்கப்படும்" என மிரட்டியது.

புலிகள் மீதான தடைக்கெதிரான இயக்கங்கள் இங்கு பல்வேறு மட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டன. இவற்றுக்குப் பின்னணியில் புலிகளின் வழிகாட்டல்- வற்புறுத்தல்களின்படியே இவை நடந்தன என்பது பகிரங்க ரகசியம்.

யாழ் பல்கலைகழகத்தில் பொங்கு தமிழ் என அழைக்கப்பட்ட நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு மட்டக்களப்பு, வவுனியா என விஸ்தரிக்கப்பட்டது. வடக்கு கிழக்கின் கத்தோலிக்க அமைப்புக்களும், அங்கு இயங்கும் அரச சார்பற்ற ஸ்தாபனங்களும் அதைச் செய்தன. சில தமிழ் கட்சிகளும் தூதுவரகங்கள் தோறும் சென்று கேட்டுக் கொண்டன.

அரசு தரப்பில் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் புலிகளை பிரிட்டன் தடை செய்ய வேண்டும் என முயற்சிகளை மேற்கொண்டார். ஒரு பக்கம் யாழ் பல்கலைக் கழகத்தில் "புலிகளைத் தடை செய்ய வேண்டாம்" என கையெழுத்து வேட்டை நடத்த, மறுபக்கம் சிஹல உறுமய "புலிகளைத் தடை செய்ய வேண்டும்" என கையெழுத்து வேட்டை நடத்தியது.

புலிகளைத் தடை செய்தால் அது நோர்வே மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் எனக் கூற, ஜனாதிபதி சந்திரிக்கா, "புலிகள் மீதான தடை சமாதான முயற்சிகளை எந்த வகையிலும் பாதிக்காது" என கருத்து வெளியிட்டார்.

ஐ.தே.க தனது வழமையான பாணியில் கழுவிய மீனில் நழுவிய மீனின் விளையாட்டை காட்டியது. இதற்குள் ஜே.வி.பி புலிகளை மாத்திரமல்ல சிஹல உறுமயவையும் தடைசெய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு வருகிறதோ இல்லையோ பிரிட்டனின் தடை என்ற கண்டத்திலிருந்து தப்புவது புலிகளின் காய் நகர்த்தலில் அடங்கியிருந்த முக்கிய அம்சமாக இருந்தது.

எனவேதான் சமாதான பேச்சு வார்த்தைக்கான தமது "நல்லெண்ண" சமிக்ஞையாக யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தார்கள் எனப் பலரும் அபிப்பிராயப்படுவதும் நியாயமே.

பிரிட்டனின் வெளிவிவகார பிரதி



அமைச்சர் இலங்கைக்கு சில மாதங்களுக்கு முன் விஜயம் செய்த போது சிங்களத் தீவிரவாதி

தொடர்ச்சி 02பக்கம்



யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் திரும்பவும் கைதடிப்பகுதியில் குடியேறி வருகின்றார்கள் அவர்களுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள். கலந்துரையாடிக் கொண்டிருப்பதை படத்தில் காண்கிறீர்கள்.













www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## விசுவரூபம் எடுக்கும் பாதாள உலகம்

தீவிரமடைந்த இனப்பிரச்சினையும் அதன் தொடர்பான யுத்தமும் நாட்டில் பாரதூரமான பொருளாதார நெருக்கடியையும், பாதாள உலக செயற்பாடுகளையும் அதிகரிக்கச் செய்துள்ளன.

சிங்கள, தமிழ் இரண்டு தரப்பிலும் அதிதீவிரவாத சக்திகளின் வளர்ச்சி கட்டற்ற ஓர் அராஜக நிலையை தோற்றுவித்துள்ளது. ஊழல் பேர்வழிகளும், கொள்ளை இலாபம் அடிப்போரும், நாகரீகத்தைக் கொன்றொழிக்கும் பயங்கரவாதத்துக்கு ஆதரவளித்து வளர்ப்போரும் சமூகத்தில் முக்கியமான மனிதர்களாக மாறும் அவலநிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பாதாள உலக கோஷ்டிகள் கூட அரசியல், சமூக, பொருளாதாரத் தளங்களில் தமது ஆதிகத்தை நிலைநாட்ட முயல்கின்றன. திருமலை சென்ற ரயிலில் கொள்ளை, மலையகத்தில் பதுளை நோக்கிச் சென்ற பயணிகள் ரயிலில் கொள்ளை, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணி பாலியல் பலாத்காரத்துக்குள்ளாக்கப்பட்டுப் படுகொலை, சம்பளப்பணத்தை கொள்ளையடிப்பதற்காகத் துப்பாக்கிப் பிரயோகம் என நாளாந்தம் பத்திரிகைகளிலும், எலக்ரோனிக் மீடியாக்களிலும் இந்தச் செய்திகளே பிரதான இடத்தைப் பிடித்துள்ளன. கூலிக்காகக் கொலை செய்வோர் கையிலும் நவீன ஆயுதங்கள் சர்வசாதாரணமாகப் புழங்குகின்றன.

படைகளிலிருந்து விட்டோடியவர் பலர் பாதாள உலகக் கோஷ்டிகளில் ஆதிக்கம் வகிக்கிறார்கள். இக்கோஷ்டிகளிடமிருந்து ரொக்கட் ரவைகளும், ரொக்கட் லோஞ்சர்களும் கண்டுப்பிடிக்கப்பட்டிருப்பதுவும் அண்மைக்காலச் செய்தி.

இவ்வாறான நிலையானது நாட்டின் யுத்தமற்ற பகுதிகளில்கூட மக்கள் மத்தியில் ஒரு பதட்டத்தையும், பீதியையும், சினத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் எரியும் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்காணுவதற்கான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படாவிட்டால் நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் நிலமை கட்டற்றுப் போகலாம்.

விலைவாசி ஏற்றம், வேலையின்மை சம்பளப்பற்றாக்குறை இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இந்த நாட்டில் பிரதான பிரச்சினையாக நிலவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியமாகும்.

தற்போது அதிகாரப்பகிர்வு பற்றிய பேச்சுக்கள் செயற்பாடுகள் மூச்சடங்கிப் போயுள்ளன. இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் வேண்டுகின்ற சக்திகள் அனைத்தும் இன்றைய நிலையில் அரசியல் தீர்வுக்கான விடயங்களை வீரியத்துடன் முன்னெடுத்தல் வேண்டும்.

சட்டம், ஒழுங்குக்கான காவல்த்துறை தூய்மைப்படுத்தப்படுவதும், நீதித்துறையின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதும் சமூகத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தப் பிரதானமானவையாகும். அரசு படைகளை அதிகரிப்பதைவிட மக்கள் மத்தயில் நம்பிக்கையை வளர்ப்பதற்கான வேலைத்திட்டங்களில் ஈடுபட வேண்டும்.

ஏதோ காலத்தை இப்படியே பிரச்சினைகளுடன் ஓட்டிவிடுவோம் என்ற மெத்தனப் போக்கோ அல்லது இவற்றைப் பயன்படுத்தி நடத்தப்படும் எதிர்கட்சி அரசியலோ விசப்பாம்புகளுடன் நடத்தும் விளையாட்டாகவே அமையும். தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் நிலவரங்களைப் பேரழிவை நோக்கிய அடிவைப்புக்களாகவே அமையும்.

## சத்தியாக்கிரகம்

இந் நாட்டின் உண்மையான அந்நியச் செலாவணி வருமானத்தில் 50வீதத்துக்கு மேல் ஈட்டித் தருபவர்கள் தோட்டத் தொழிலாளர்களே என்பது யாரும் மூடி மறைக்க முடியாத, உதாசீனப்படுத்த முடியாத உண்மை.

தற்போது நாட்டில் அராஜகமாக வீசியடிக்கும் பொருளாதாரச் சூழலில் அரச துறை, தனியார் துறை, ஓய்வூதியக்காரர்கள் எனப் பல தரப்பட்டோருக்கும் ஏதோ ஓர் அளவில் சம்பள உயர்வு வழங்கப்பட்டிருக்கையில், தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் அந்தச் சம்பள உயர்வை வழங்குவதில் காலதாமதம் காட்டுவது எந்தத் தார்மீக நியாயங்களுக்கும் உட்படமாட்டாது.

2000ம் ஆண்டுகளில் உச்ச அளவில் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக பிரதமரே கூறிவருகிறார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான யோகராஜன் அவர்கள் தேயிலைக் கம்பனிகள் பெறுகின்ற 10 வீதத்துக்கும் குறைவான தொகையையே இங்கு சம்பள உயர்வாகக் கோரப்படுகிறது என தமது கோரிக்கையின் நியாயத் தன்மையைத் தெளிவு படுத்துகிறார்.

இலங்கையின் முக்கியமான நகரங்களில் ஓடித்திரியும் வாகனங்களும், நகரங்களில் குவிந்து கிடக்கும் எண்ணிறைந்த ஆடம்பரப் பாவனைப் பொருட்களும் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில்தான் இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆனால் இந்த வருமானத்தை ஈட்டித் தரும் தோட்டத் தொழிலாளர்கள் தமது அன்றாட வாழ்க்கையை அரைபட்டினி, கால்பட்டினி என தங்களின் உயிர்வாழும் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சம்பள உயர்வுக் கோரிக்கையில் தாங்கள் ஒன்றும் செய்ய முடியாது என்று அரசு கைவிரிக்க முடியாது. அவர்களின் 400ரூபா சம்பள உயர்வு கோரிக்கை ஒன்றும் நிறைவேற்ற முடியாததல்ல. தேவையற்ற விடயங்களுக்கெல்லாம் பணம் அள்ளிக் கொட்டப்படும் போது இந்த உயர்வு வழங்கப்பட முடியாமைக்கு அளிக்கப்படும் விளக்கங்கள் அர்த்தமற்றவை. முதலாளிகளல்ல இந்த அரசாங்கத்தைக் காப்பாற்றிக் கொண்டிருப்பவர்கள். முதலாளிகளின் நலன்களுக்காக இந்த விடயத்தில் மௌனமாக இருந்தால் வலதுகள் விடயத்தில் வலது குறைந்த இந்த அரசாங்கம் இடதுகளையும் இழக்க நேரிடும்.

எனவே அரசாங்கம் காலந்தாழ்த்தாது மலையகத் தொழிலாளர்களின் நலன்களுக்காக மட்டுமல்ல தன்னலனுக்காகவும் சம்பள உயர்வை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்திலுள்ள இனவாதிகளின் தடைகளை மீறி ஜனாதிபதியும் தொழில் அமைச்சரும் செயற்பட வேண்டும்.

## புலிகளின் மேல்

01ம் பக்க தொடர்ச்சி

களிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பிய போது இவர்கள் டைனோசோர் காலத்தில் வாழ்கிறார்கள் என்று கிண்டல் செய்திருந்தார்.

சர்வதேச தரத்திற்கேற்ப பல்லினங்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்பதே இன்றைய சர்வதேச அழுத்தமாகவும் இருக்கிறது.

யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு மாத்திரமல்ல நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும், சென்மதி நிலுவையைச் சரிக்கட்டுவதற்கும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றைச் சார்ந்துள்ள இலங்கை அரசானது, அரசியல் தீர்வுக்குத் தான் விசுவாசமாக இருப்பதாக நிரூபிப்பது அவசியம்.

அதேபோல தமது யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவையான ஆயுத தளபாடங்களைக் கொண்டுவந்து சேர்ப்பதற்கும், அந்தச் செலவுகளுக்கான பணத்தைத் தொடர்ந்து திரட்டுவதற்கும் புலிகளும் சர்வதேச எதிர்ப்பின்மையைக் காப்பாற்றிக் கொள்வது அவசியமாகும்.

ஆனால் அது இன்று மிகவும் கடுமையான நிலையை அடைந்துள்ளது. தற்போதைய தடை ஐரோப்பா வட அமெரிக்கா வரை எதிரொலிக்கவே செய்யும்.

இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதற்கான நோர்வையின் முயற்சியில் தனது செல்வாக்கை நிலைநாட்ட பிரிட்டன் இந்தத் தடை என்னும் ஆயுதத்தைத் தூக்கியுள்ளது.

இந்தியாவின் பிராந்திய ஆளுமைக்குச் சமமாகவோ அல்லது அதையும் மீறியதொரு நிலையைப் பேணவோ பிரிட்டன் முயற்சிக்குமாயின், பிரிட்டன் தென்னிலங்கைக்குச் சார்பாகவே செயற்படும்.

தற்போது அது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இத்தகைய நிலை தங்களுக்கு ஏற்பட்டதற்கு புலிகளே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

ஆச்சரியம் என்னவென்றால் தம்மீது புலிகளால் விதிக்கப்பட்ட தடைக்கு மூச்சுக் காட்டாத தமிழ் கட்சிகள் புலிகள் தடை விதிக்கப்பட சிபாரிசு செய்யப்பட்டதற்காக பாசாங்குத்தனமாக அழுகின்றன.

புலிகள் தாங்கள் எல்லோரையும் பயன்படுத்துவதாக எப்போதும் கனவு காண்பவர்கள். ஆனால் உண்மையில் தென்னிலங்கை மீது செல்வாக்குப் பெறுவதற்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ புலிகள் எப்போதும் சர்வதேச சக்திகளுக்கும், பிராந்திய சக்திகளுக்கும், ஏன் உள்நாட்டு சக்திகளுக்கும் கூட ஒரு கருவியாகவே பயன்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதை வரலாறு தெளிவுபடுத்தும்.

▲❊▲❊▲

### எனது குறிக்கோள் பதவியின் சலுகைகளை அனுபவிப்பதல்ல

எல்.ரி.ரி.ஈ. ஐ தோற்கடிக்கும் திறனும் அறிவும் என்னிடம் உள்ளது. இருப்பினும் தளபதியாக நான் வரக்கூடாதென்று எனக்கு மேலுள்ள இறைவன் தீர்மானித்துவிட்டான். அந்த ஆசீர்வாதம் லெப்டினன்ட் ஜெனரல் பளகல்லவுக்கு கிடைத்துள்ளது. மேடையில் நாமெல்லோரும் நடிகர்கள் எமது வேடங்களை நாம் நடிக்கிறோம். திரைவிலக நாம் அகன்று செல்லுகிறோம்.

**மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா பிரியாவிடை வைபவத்தில் கூறியதாக- வீரகேசரியில் 05.02.2001**

▲❊▲❊▲

### சமாதானத்துக்கான வாய்ப்பு

தற்போது விடுதலைப் புலிகளிடமிருந்து ஓரளவு திருப்திகரமான பதில்கள் கிடைத்தவண்ணம் இருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தை கைநழுவ விடக்கூடாது. சிறிதளவேனும் சமாதானத்துக்கான வாய்ப்பு உள்ளதா என்பதை கண்டறிய நாம் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும்.

**ஜனாதிபதியின் சுதந்திர தின உரையிலிருந்து**

**தினக்குரல்- 05.02.2001**

▲❊▲❊▲

### ரயில் கொள்ளை

திருமலை சென்ற ரயிலில் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம் கொள்ளையிடப்பட்டது. ராகமையில் ஏறிய கொள்ளையர்கள் நாகொல்லாகமவில் இறங்கிக் கொண்டார்கள். அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. பயணிகள் பெரும்பாலானோர் திருமலை காளியம்மன் கோயில் கும்பாபிஷேகத்துக்குச் சென்றவர்கள்.

**தினக்குரலில்**

▲❊▲❊▲

### பூகம்பம்

கத்தோலிக்க மிசனரிமார்களை குஜராத் மக்கள் படுகொலை செய்ததற்கு தண்டனையாகவே கடவுள் பூகம்பத்தை உண்டாக்கி ஊரையே அழித்திருக்கிறது.

**கர்நாடக சிவில் கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ரி. ஜோன் கூறியதாக வீரகேசரியில்.**

▲❊▲❊▲

### சுமங்கலி பூஜை

திருப்பதி ஏழுமலையானின் மனைவி பத்மாவதி தாயாரின் கழுத்திலிருந்த மாங்கல்யம் அறுந்து விழுந்ததாக வதந்தி பரவியது. இதையடுத்து தமிழகத்தில் பல பெண்கள் அவசர அவசரமாக சுமங்கலி பூஜை நடத்தினார்கள்

**தினமலரில்**

▲❊▲❊▲

### தோள் பலம்

தமிழ் மக்களுடன் நாம் யுத்தத்தில் ஈடுபடவில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். சிறிய குழுவினரான தீவிரவாதிகளுடன் அதாவது நியாயமற்ற கோரிக்கைகளை வலியுறுத்தி நாட்டில் பயங்கரவாதத்தை தோற்றுவித்திருக்கும் குழுவினருடனேயே சண்டையிடுகிறோம். நமது தோள் பலத்தின் எதிரே எதிரி தள்ளாடிப் போயுள்ளான்.

**ரட்ணசிறி விக்கிரமநாயக்கா கூறியதாக தினக்குரலில்**

▲❊▲❊▲

### மனநோயாளிகள்

1980ம் ஆண்டுக்கு பின் பிறந்த யுத்த சூழலில் வளர்ந்தவர்களில் பலர் மனம் பேதலித்துள்ளனர். புள்ளி விபரப்படி இவர்களில் 1000 பேர் வரை அங்கொட ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சைப் பெற்றுள்ளனர். வெளிநோயாளர்களாக 10,000 பேர் வரை வந்து சிகிச்சைப் பெற்று சென்றனர். 50,000 க்கு மேற்பட்ட பெண்கள் யுத்தத்தால் விதவைகளாகியுள்ளனர். 100,000 சிறுவர்கள் வரை தமது உறவினர்களில் ஒருவரை யுத்தத்தில் இழந்துள்ளனர்.

**டாக்டர் ஜி. வாட்டொடுவ ஆதவனில்**

▲❊▲❊▲

### யுத்தம் ஒரு கொள்ளையின் வடிவம்

நான் என்றும் யுத்தத்திற்கு எதிரானவனே யுத்தம் என்பது ஒரு கொள்ளையின் வடிவமாகும். கடந்தகால யுத்தங்களை ஆராய்ந்து பார்த்தால் யுத்தம் என்பது ஒரு நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளையடிப்பது. இதனை கூறுவதற்கு நான் அச்சம் கொள்ளப் போவதில்லை.

**றொனி டி மெல் கூறியதாக வீரகேசரியில்.**

▲❊▲❊▲


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-

37/2, 1/1, Wimalasara Rd
Kalubowila, Dehiwala.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
7 1603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி விதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2022

29 ஏ, வாவிக்கரை விதி
மட்டக்களப்பு.
☎ 065 25669

No: 38.G. லோவர் ரோட்
உவர்மலை, திருமலை.
☎ 026 24221

144A , மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 23102

சென்செபஸ்த்தியார் விதி
மன்னார்.
☎ 023 32822

மின் அஞ்சல் முகவரி [E-MAIL ADDRESSES]
epiclondon@gn.apc.org - LONDON


படிப்பகம்

www.padippakam.com



## அன்பார்ந்த நண்பர்களே!

திரு. அ. வரதராஜப்பெருமாள் அவர்கள்

# அன்பார்ந்த நண்பர்களுக்கு!

எழுதும் கடிதம்
-ஏழாவது

மீண்டும் உங்களோடு இக்கடிதம் மூலம் தொடர்பு கொள்வதில் எனது மகிழ்ச்சியை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். வழமைபோலவே கடிதம் எழுதத் தொடங்க ஒரே குழப்பம். ஆனால் இங்கு ஒரு வித்தியாசம். இம்முறை எதை மட்டும் எழுதுவது. எவற்றைத் தவிர்ப்பது என்பது. ஏனெனில் அவ்வளவுக்கு நாம் பகிர்ந்து கொள்ள வேண்டிய விடயங்கள் ஒரு சில வாரங்களுக்குள் குவிந்து விட்டன.

எனினும் குவிந்து கிடந்தவற்றை குழப்பி ஒழுங்கு படுத்திப் பார்த்தேன். பெரும்பாலானவை ஒரே விடயத்தை அதாவது பிரிட்டன் புலிகளைத் தடை செய்வதோடு தொடர்புபட்டவையாகும். நமது நாட்டின் பத்திரிகைகளும் கடந்த சில வாரங்களாக அந்த விடயத்தையே நிரப்பியிருப்பதனாலும் அது எல்லோர் நினைவுகளையும் நிறைத்திருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை.

ஆனால் இவ்வேளை நாம் ஒரு விடயத்தைக் கவனிக்கத் தவறக் கூடாது. அதாவது தென்னிலங்கை அரசியலில்-தென்னிலங்கை மக்கள் மத்தியில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது விடுபட்டுப் போய் பிரித்தானியா புலிகளைத் தடை செய்யுமா? தடை செய்ய வேண்டுமா? இல்லையா? என்பதே பிரதானமான தாக்கப்பட்டிருக்கின்றது.

இது சிங்கள இனவாதிகளின் வெற்றியா? அல்லது தமிழ் இனவாதிகளின் வெற்றியா? என்பது ஒருபுறமிருக்கட்டும். இன்றைய காலகட்டத்தில் எமது அபிப்பிராயம் என்ன? புலிகளை பிரிட்டன் தடை செய்ய வேண்டுமா? வேண்டாமா? என்ற கேள்விகளுக்கு சர்வ தேச சமூகங்களுக்கு ஒரு பதிலும் நாங்கள் இதுவரை சொல்லவில்லை. என்றாலும் இதுபற்றி நாம் தமிழ் மக்கள் மத்தியில் சில விளக்கங்களை எழுப்புவது இன்றைய கால கட்டத்துக்கு அவசியமானதொன்றாகும்.

### தம்மைத் துரோகிகள் என அங்கீகரிக்கும் புதுமையான தமிழ்ப் பிரதிநிதிகள்

அரச எதிர்ப்பு அரசியலை பத்திரிகை அறிக்கைகளுக்கு மேல் வேறு வடிவங்களுக்குக் கொண்டு செல்வதற்குக் களம் அற்றிருந்த தமிழ்க் கட்சிகளுக்கு புலிகள் மகிழ்ச்சிதரக் கூடிய வேலையொன்றைக் கொடுத்துள்ளனர்.

தங்கள் தலைவர்களையும் தங்கள் அணியிலிருந்த பல நாற்றுக்கணக்கான உறுப்பினர்களையும் படுகொலை செய்து தங்களது ஜனநாயக உரிமைகளையும் தடைசெய்துள்ள புலிகளை பிரிட்டன் அரசாங்கம் தடைசெய்துவிடக் கூடாது என அக்கறை கொண்டு சில தமிழ் கட்சிகள் தூதரகங்கள் தோறும் கேட்டு வரும் வேடிக்கையான வேலைதான் அது.

புலிகளுடன் சேராமலும், அதேவேளை புலிகளால் அங்கீகரிக்கப்படாமலும் ஒளித்து வாழும் இந்தக் கட்சிகள் புலிகளைப் பிரிட்டன் தடை செய்ய வேண்டாம் எனக் கடந்த சில வாரங்களாக முழுமூச்சுடன் கேட்டு வருகின்றன. இவர்கள் புலிகளுக்குப் பயந்தே தம்மைத் தேர்ந்தெடுத்த மக்கள் மத்தியில் போக முடியாதிருக்கின்றனர்.

சிங்கள இராணுவம் மற்றும் சிங்களப் பொலிஸாரின் பாதுகாப்பின்றி நடமாடும் சுதந்திரத்தைக் கூட இழந்திருக்கும் இவர்கள் புலிகளைத் தடை செய்ய வேண்டாம் என்று கேட்டு வருவது இவர்களின் "விசாலமான" அரசியல் மனோபாவத்தைக் காட்டுகிறதா அல்லது அடுத்து வரும் தேர்தல்களிலும் புலிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற தந்திரயா?

எவ்வாறாயினும், அமிர்தலிங்கம் தொடக்கம் நீலன் திருச்செல்வம் உட்பட மட்டக்களப்பு பா.உ. நிமலன் சௌந்தரநாயகம் வரை துரோகிகள் எனப் படுகொலை செய்யப்பட்டதைத் தமிழர் கூட்டணியினர் எப்போதுமே புலிகளின் மாவீரம், தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு அவசியம் என அங்கீகரித்தே வந்துள்ளனர்.

தற்போது யாழ்ப்பாண மேயராக இருப்பவர் ஒருமுறை புலிகளால் தான் படுகொலை செய்யப்படுவதைப் பெருமையாகக் கருதுவதாகக் கூடக்கூறியிருக்கிறார். எனவே கூட்டணியினரைப் புலிகள் படுகொலை செய்வதற்கு சர்வதேச லைசன்ஸ் வழங்கும்படி கூட்டணியினரே கோருவது புதினமானதல்ல. உண்மையில் கூட்டணிக்காரர்கள் புலிகளால் படுகொலை செய்யப்படுகிறபோது புலிகளைக் கண்டித்தவர்கள். கவலைப்பட்டவர்கள்தான் மடையர்களாக்கப்பட்டிருக்கிறார்கள்.

ரெலோ தலைவர் சிறீசபாரத்தினமும் முன்னூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்களும் புலிகளால் படுகொலை செய்யப்பட்டதை. அவர்களின் இயக்கம் 1986ம் ஆண்டு தடைசெய்யப் பட்டதைத் தற்போதுள்ள ரெலோ தலைவர்கள் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அங்கீகரித்துள்ளனர். அவர்களின் நினைவுநாட்களாக இனிவரும் ஆண்டுகளின் தினங்களில் ரெலோக்காரர்கள் மகிழ்ச்சிச் சுவரொட்டிகளா ஒட்டப் போகிறார்கள்? இந்த இடத்தில் ஒரு பழைய நினைவை மீட்டுப் பார்க்க விரும்புகிறேன்.

### எங்களுக்கு நாங்களே செருப்பாலடிக்கணும்

1986ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ந் திகதி என்று நினைக்கிறேன். தமிழக சட்டசபைக் கட்டடத்துக்கு எல்லா ஈழத் தமிழ்க் கட்சிகளையும் எம்.ஜி. ஆர் அழைத்து சிறிலங்கா அரசாங்கம் அப்போது முன்வைத்த பிரேரணையைத் தந்து ஐந்து நாட்களில் அபிப்பிராயம் கூறும்படி கேட்டார். அன்று புலிகள் சார்பில் பிரபாகரனும் வந்திருந்தார்.

தோழர் பத்மநாபா தானாகவே சென்று பிரபாகரனிடம் "தம்பி எங்களுக்கிடையில் எத்தனைதான் வேறுபாடு இருந்தாலும், நாங்கள் இந்த விடயத்தில் இதுவரை இருந்தது போல ஒரே நிலைப்பாட்டுடன் இருக்க வேண்டும். எனவே இது சம்பந்தமாகப் பேச வேண்டும்" என்று கேட்டார். அதற்கு ஒத்துக் கொண்ட பிரபாகரன் தங்களுடைய காரியாலயத்துக்கு வரவேண்டும் என்றார். இதுதான் நானோ தோழர் நாபாவோ பிரபாகரனை நேரடியாகச் சந்தித்த கடைசி நாள். இரண்டு நாட்களின் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் நாங்கள் ஒரு குழுவாகச் சென்றோம். அதில் நானும் சென்றிருந்தேன்.

இன்றைய பாலசிங்கம், யோகி மற்றும் திலகர் (இப்போது இந்த இருவரும் புலிகளால் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் எனினும் எங்கே, என்ன செய்கிறார்கள் என்ற விவரங்கள் சரியாகத் தெரியவில்லை) ஆகிய மூவரும் எங்களுடன் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தார்கள். எங்களிடம் யோகிதான் முதல் கேள்வியை எழுப்பினார். "நீங்கள் ஏன் அநுராதபுரத்தில் நாங்கள் நடத்திய ஒப்ரேசனைக் கண்டித்தீர்கள்" அது எங்கள் நிலைப்பாடு என்று நான்தான் பதில் கூறினேன்.

அடுத்த குற்றச்சாட்டையும் யோகியே வீசினார். "ரெலோக்காரர்கள் எழுபது பேர் அளவில் நீங்கள் உங்கள் முல்லைத்தீவு முகாம்களில் பாதுகாத்து வைத்திருக்கிறீர்கள். அவர்களை உடனடியாக எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்" என்றார். அதற்கும் நானேதான் பதில் அளித்தேன். "நீங்கள் செய்வது சரியல்ல. இப்படி ஒரு நிலைமை உங்களுக்கு வந்திருந்தாலும் இதைத்தான் நாங்கள் செய்திருப்போம். ஆனபடியால் நீங்கள் கேட்கிறபடி நாங்கள் செய்ய முடியாது" என்றேன். "அப்படியானால் விளைவுகளை நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும்" என்று மிரட்டினார். இன்றைக்கு அதனை நினைத்துப் பார்க்கிறேன்.

புலிகளால் ரெலோ தடை செய்யப்பட்டு சில வாரங்களின் பின்னர் சென்னை வந்திருந்த கவிஞர் என்னை எனது நண்பர் என்றரிதியில் எங்களுடைய காரியாலயம் வந்து சந்தித்தபோது, ரெலோவுக்காக நீங்கள் ஏன் வக்காலாத்து வாங்குகிறீர்கள்? ஏன் அதைப் பாதுகாக்க முற்படுகிறீர்கள்? ரெலோக்காரர்கள் எவ்வளவு சமூகக் கொள்ளைகளை நடத்தியிருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று அடுக்கடுக்காகக் கேள்விகளை எழுப்பினார். நான் என்னுடைய வழமையான பாணியிலேயே என் தொண்டைத்தண்ணி வரள சேரனுடன் சில மணித்தியாலங்கள் விவாதிக்க வேண்டியேற்பட்டது. இப்போது அதையும் நினைத்துப் பார்க்க வேண்டியவனாக உள்ளேன்.

அதுமட்டுமல்ல சிறிசபாரத்தினம் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ரெலோவுக்குள் உட்கட்சிப் பிரச்சினை ஏற்பட்டது. செல்வமா? பொபியா ரெலோ தலைவர் என்ற பிரச்சினை ஏற்பட்டது. அவ்வேளையில், தோழர் நாபா அவர்கள், பொபி யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்டதெல்லாம் மிகமோசமானது. ஆகவே நாங்கள் செல்வத்தைத்தான் ஆதரிக்க வேண்டும் என்று ஆதரவு கொடுத்தார்.

சிறிசபாரத்தினம் கொலை செய்யப்பட்டதன் பின்னர், அதைக் கண்டித்து சென்னையில் பெரியார் திடலில் ஒரு பகிரங்கக் கூட்டம் தி.மு.க. வினால் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் கலைஞர் கருணாநிதியும் பிரதம உரையாற்றினார். அந்தக் கூட்டத்தில் பேசிய நான் இந்த செல்வம் என்னும் அடைக்கலநாதனின் கையைப் பிடித்து ரெலோவின் புதிய தலைவர் என அறிமுகப்படுத்தியும் புலிகள் ரெலோ மீது நடத்திய கொடூரங்களைக் கண்டித்தும் சுமார் அரை மணி நேரம் பேசினேன். இன்றைக்குப் புலிகளைக் காப்பாற்ற இவர்கள் படியேறுவதைக் கண்டு வெட்கப்படவா? வேதனைப்படவா?.

அதேபோல தோழர் பத்மநாபா உட்பட பல நூற்றுக்கணக்கான ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் படுகொலை செய்து இயக்கத்தையும் தடை செய்து வைத்திருக்கிற புலிகளுக்கு சுரேஷ் குழுவினர் தூதரகம் தோறும் புலிகளின் விடுதலைப் போராட்டத்தின் புனிதம் பற்றி பாராட்டுப் பத்திரம் வாசித்து வருகின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசாங்கம் புலிகளுடன்தான் பேசித் தீர்க்க வேண்டும் என்பதன் மூலம் இவர்கள் புலிகளே தமிழர்களின் ஒரே பிரதிநிதிகள் என அங்கீகாரம் வழங்குகின்றனர். புலிகள் இவர்களை இன்னமும் தடை செய்து வைத்திருப்பதையும், ஈ.பி.ஆர்.எல்.எவ். க்கு எதிராக இதுவரை மேற்கொண்டு வந்துள்ள கொடூரங்கள் அத்தனையும் சரி என்பதே இவர்கள் தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வழங்குகின்ற செய்தியாகும்.

### ஆறு கடக்கும் வரைக்கும் தான் அண்ணன் தம்பி உறவு

எப்போதுமே மீசையில் மண்படாத புலிகள் இப்போது தங்களால் சமூக விரோதிகள். துரோகிகள் என்று பட்டம் சூட்டப்பட்டவர்களுக்கு, தங்களைக் காப்பாற்ற முயற்சித்து வருகின்றமைக்காகப் நன்றி தெரிவிக்கும் நிலையைப் பார்க்கையில் இது "கிணற்றில் விழுந்த புலியும் கைகொடுத்துதவிய பிராமணனும்" என்ற பஞ்சதந்திரகதை ஒன்றையே நினைவுப்படுத்துகிறது.

இந்தக் கட்சிகளைத் துரோகக் குழுக்கள், சமூக விரோதிகள் என்று தடை செய்து வைத்திருப்பதை இன்னமும் மாற்றிக் கொள்ளாத புலிகளை, இந்தத் "துரோகக்" கட்சிகள்தான் காப்பாற்றுவதற்கு முயற்சிக்க வேண்டிய நிலைக்கு சூழ்நிலைகளை இழுத்து வந்த காரணிகள் என்ன? இந்தத் "துரோகக்" கட்சிகளும் புலிகளைத் தடை செய்யும்படி கேட்டுப் பிரச்சாரம் செய்திருந்தால் புலிகளின் நிலை என்ன? அப்படியானால் புலிகளைக் காப்பாற்றும் அளவுக்கு ஒரு நிர்ணயகரமான பாத்திரத்தை இந்தத் "துரோகக்" கட்சிகள் ஆற்றமுடியும் என்பதை இப்போதாவது புலிகள் ஒத்துக் கொள்வார்களா?.

பிரிட்டன் புலிகளை பயங்கரவாத இயக்கமென தடை செய்து விடுவார்களோ என்று பிரபாகரனை விட மிகவும் கவலைப்பட்டவர் புலிகளின் தத்துவத் தலைவர் என்று அழைக்கப்படும் பாலசிங்கமே. புலிகள் ஏனைய தமிழ் கட்சிகளைத் தடை செய்ததையும், பல நூற்றுக்கணக்கான போராளிகளையும் படுகொலை செய்த போதெல்லாம், தமிழ் மக்களின் ஜனநாயகக் குரல்வளையை நசுக்கிக் கொலை செய்தபோதெல்லாம் அது தங்களின் விடுதலைப் போராட்டத்தின் பாகம் என வீரப்பிரதாப அறிக்கைகளைக் கட்டவிழ்த்துவிடும் பாலசிங்கம், இப்போது புலிகளை பிரிட்டன் அரசாங்கம் தடைசெய்தால் தன்னால் பிரிட்டனில் இருக்க முடியாது போகும் என்றும், புலிகளைத் தடை செய்யவேண்டாம் எனக் கேட்டுக் கொண்ட தமிழ்க் கட்சிகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அறிக்கை விடுத்துள்ளார்.

பாலசிங்கம் பிரிட்டனில் இருந்தால்தானா தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் நடக்கும்?. பக்கத்தில் இருக்கும் இந்தியாவையே எமக்குத் தேவையில்லை என்று எட்டி உதைத்தவர்கள். இப்போது ஒன்பதாயிரம் கிலோ மீற்றருக்கு அப்பால் இருக்கும் பிரிட்டன் தடை செய்தால் விடுதலைப் போராட்டம் பாதிக்கப்பட்டு விடும் என்கிறார்கள். தமிழர்களின் போராட்டம் நாளுக்கு நாள் வெகுதூரம் போய்க் கொண்டிருப்பதன் அறிகுறியா இது?

1985ம் ஆண்டு திம்புப் பேச்சு வார்த்தை முறிவடைந்ததைத் தொடர்ந்து பாலசிங்கம் மற்றும் சந்திரஹாசன் ஆகியோரை இந்தியா நாடுகடத்தி லண்டன் அனுப்பியது. சந்திரஹாசன் பிரிட்டன் குடியுரிமை பெற்றிராததால் அவரை மீண்டும் இந்தியாவுக்குள் அனுமதிக்க வேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கு ஏற்பட்டது.

ஆனால் பிரிட்டனின் குடிமகனான பாலசிங்கத்தை லண்டனால் மறுக்க முடியவில்லை. திம்புப் பேச்சுவார்த்தையின் பின்னர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் தமிழ் இயக்கங்களைச் சந்திக்க வேண்டினார். பாலசிங்கம் நாடு கடத்தப் பட்டதைத் தொடர்ந்து பிரபாகரன் இந்தியாவுக்குள் ஓடி ஒளித்துக் கொண்டார்.

### யார் காலிலும் விழுவார்கள் !!!

அப்போது இந்த பாலசிங்கம் ஏறத்தாழ ஒவ்வொரு நாளும் போன் எடுத்து நாபாவைத் தொடர்பு கொண்டு தன்னை இந்தியாவுக்குள் அனுமதிக்கும்படி இந்திய அரசை வலியுறுத்தும்படி கேட்டுக் கொண்டார். நாட்கள் நகர்ந்தன. இந்தியப்பிரதமர் தமிழ் இயக்கங்களை எதிர்பார்த்திருந்தார். மீனம்பாக்கம் விமான நிலையத்தில் விமானம் ஒன்று தமிழ் இயக்கத் தலைவர்கள் டெல்லிக்குப் பயணம் செய்வதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் பிரபாகரன் ஒளித்திருக்கும் நிலையில் தாங்கள் வரமுடியாது என ஈழத் தேசிய விடுதலை முன்னணி (இதில் அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புலிகள், ஈரோஸ் ஆகியன ஐக்கியப்பட்டிருந்தன.) அறிவித்தது.

நாட்செல்லச் செல்ல சிறீசபாரத்தினமும், ஈரோஸ் பால்குமாரும் பிரபாகரனுக்காக தாங்கள் இந்திய அரசாங்கத்தைப் பகைத்துக் கொள்ள முடியாது என்று நாபாவை வற்யுறுத்தினர். நாபா அதற்கு இடமளிக்காமல் எங்களுக்குள் ஒருவன் இல்லாத போது நாங்கள் டெல்லி செல்லக் கூடாது என்று உறுதியாக இருந்தார். பின்னர் சில நாட்களில் பிரபாகரன் வெளிப்பட்டார்.

வெளிப்பட்ட பிரபாகரன் தனக்காக உறுதியாக நின்ற ஏனைய தமிழ்த் தலைவர்களை சாட்டை செய்யவில்லை. மாறாக, அவரின் மிக நெருங்கிய நண்பனான அப்போதைய தமிழக பொலிஸ்துறை உயரதிகாரி **மோகன்தாஸைச்** சந்தித்து அவரினூடாக எம்.ஜி.ஆரைச் சந்தித்தார். இதைப் பின்னர் எங்கள் மத்தியில் தனது கெட்டித்தனம் பற்றிய புளகாங்கிதத்தில் பிரபாகரன் கூறிய வார்த்தைகள், "எனக்குத் தெரியும் ஆரைப் பிடிச்சுக் கொண்டு போக வேணும் எண்டு., போனன் காலைப் பிடிச்சன் எல்லாம் சரி" பிரபாகரன் பற்றி ஒருமுறை எம்.ஜி.ஆரின் நெருங்கிய அமைச்சர் 'பண்ருட்டியார்' ஒரு முறை எங்களிடம் பிரபாகரனைப் பற்றிக் கூறுகையில், "அவன் என்னங்க செய்யறதையெல்லாம் செஞ்சுப்பிட்டு எம்.ஜி.ஆர் கால்ல விழுந்தான்னா அவருமகிழ்ந்து போறாரு" என்றார்.

எல்லாத் தமிழ் இயக்கத் தலைவர்களும் டெல்லி சென்றிருந்தார்கள். அப்போதும் நாபாவிடமும், லண்டனிலிருந்து அப்போது டெல்லிக்கு வந்திருந்த எமது ஒரு மூத்த உறுப்பினரிடமும் (அவரும் பாலசிங்கமும் ஒரு காலத்தில் நெருங்கிய நண்பர்கள்) பாலசிங்கம் "என்னை இப்படி ப்பே கை விட்டிராதீங்க, எப்பிடியெண்டான்ன இந்தியாவுக்குள்ள என்னை எடுத்திருங்க" மீண்டும் மீண்டும் போன் எடுத்துக் கேட்டுக் கொண்டார். இந்தியப் பிரதமரை சந்தித்த தமிழ் இயக்கங்கள் முன் வைத்த முதல் கோரிக்கை பாலசிங்கத்தை இந்தியாவுக்குள் வர அனுமதிக்க வேண்டும் என்பதுதான்.

வரலாற்றில் புலிகள் தங்கள் சொந்தத் தேவைகளுக்காக எப்படியும் கெஞ்சுவார்கள், யாரோடும் சேர்வார்கள், யாருடைய காலிலும் விழுவார்கள். ஆனால் தங்களின் வேலை முடிந்ததன் பின்னர் கடித்துக் குதறத் தயாராவார்கள். இது அவர்களின் இயல்பு.

ஏனைய தமிழ் இயக்கங்களுக்கு மட்டுமல்ல, அவர்களை ஆதரித்தவர்களும் அடிமைச் சீட்டை கொஞ்சம் மறந்தாலும் அவ்வளவுதான், பரலோகச் சீட்டுதான் கிடைக்கும். புலிகள் தங்களது தேவைகளுக்காக யாருடனும் கூடுவார்கள் என்பதற்கு பிரேமதாசாவுடன் அவர்கள் கொண்ட உறவு நல்ல உதாரணம். அது பற்றி பாலசிங்கம். "அன்றைக்கு பிரேமதாசாவுடன் சமரசம் செய்து கொள்ளவில்லையென்றால் இந்தியப் படையாலும் துரோகத் தமிழ் குழுக்களாலும் நாங்கள் அழிக்கப்பட்டிருப்போம்." எனக் கூறுகிறார்.

குட்டிமணி தங்கத்துரையைப் பற்றி பிரபாகரன் இலங்கைக் கடற்படையினருக்குத் தகவல் தந்து காட்டிக் கொடுத்தது தொடக்கம் ஏனைய தமிழ் இயக்கங்களை அழிப்பது வரை சிறீலங்கா அரச படைகளுக்குப் புலிகள் துணை புரிந்த கதைகளை வரலாறு ஒரு நாள் முழுமையாகச் சொல்லியே தீரும்.

### என் அன்பிற்கினிய நண்பர்களே!

இறுதியாக இங்கு ஒரு கேள்வியை எழுப்பி இக்கடிதத்தை முடிக்க விரும்புகிறேன். அதாவது ஏனைய தமிழ் இயக்கத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆதரவாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மேயர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள். அரசாங்க நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், சமூக சேவகர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் புலிகளால் படுகொலை செய்யப்பட்டபோதும், ஏனைய இயக்கங்களை எல்லாம் சொந்த மண்ணிலே செயற்பட விடாமல் புலிகள் பயங்கரவாதத்தால் தடைசெய்த போதும், பல்லாயிரக்கணக்கான தமிழர்களும், முஸ்லீம்களும் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டு வலுக்கட்டாயமாக தமது சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்ட போதும், இம் என்றால் சிறைக் கொடூரங்கள், ஏன் என்றால் படுகொலைகள் என புலிகளின் பாசிச ஆட்சி வடக்கில் நடைபெற்றபோதும், இப்போதும் வன்னியில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் புலிகளின் அடக்குமுறைச் சிறைக்கூட வாழ்க்கை வாழும் அவலத்தைக் கண்டும் கூட அவற்றைப் பற்றி மௌனமாக இருந்த ஆயர்களும், மத குருமார்களும், சமூக சேவை நிறுவனங்களும், பல்கலைகழக மாணவர்களும் இப்போது பிரிட்டனில் புலிகளைத் தடை செய்ய வேண்டாம் என்று அக்கறைப்படுகின்றனர். இன்றும் கூட மக்களினதும், மற்ற இயக்கங்களினதும் அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பற்றி வாய் திறக்கத் தயாராக இல்லாத இவர்கள் புலிகளுக்காக மட்டும் பொங்கிக் கொண்டிருப்பதன் மர்மங்கள் என்ன என்பது எப்போது வெளிச்சத்துக்கு வரும்.

எனக்கு நீங்களும் எழுதுங்கள். என் கருத்துக்கள் பற்றி உங்கள் கருத்துக்கள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

இப்படிக்கு
உங்கள் நண்பன்
அ. வரதராஜப்பெருமாள்

படிப்பகம்

www.padippakam.com



# வெள்ளையர் நாடுகளில் தமிழர் சமூகமும் தமிழர்களின் அபிலாஷைகளும்

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகள் சம்பந்தமான போராட்டங்கள் ஆரம்ப காலத்தில் உள் நாட்டு நிலமைகளால் மட்டும் தீர்மானிக்கப்படும் ஒரு சூழ்நிலை இருந்து வந்தது. போராட்டத்தில் ஏற்பட்டு வந்த பரிமாண மாற்றங்களும், போராட்டத்தில் ஈடுபாடு கொண்ட வெவ்வேறு சக்திகளின் உந்துதல் காரணமாகவும் போராட்டத்தின் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பும் ஆற்றலும் உள்நாட்டில் போராடிக் கொண்டிருக்கும் சக்திகளின் கைகளில் இல்லாத ஒரு நிலைமை தற்போது காணப்படுகிறது.

சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள மேற்கத்தைய நாடுகள், அயல் நாடான இந்தியாவின் எதிர்பார்ப்புகள் என்பவைகளோடு வெளி நாடுகளில் வாழும் தமிழர்களின் விருப்பு, வெறுப்புகளையும் பிரதான காரணிகளாக கருதுகின்றன. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகள் இப் போராட்டத்தின் இறுதித் தீர்மானம் குறித்து பிரதான பங்கு வகிக்கின்றன.

ஏனெனில் இவர்களே இப் போராட்டத்திற்குத் தேவையான பண உதவிகளை வழங்கி வருகின்றனர். இவர்களின் பண ரீதியான பெரும் பங்கு வழங்கப்படாதிருந்தால் போராட்டம் பிசுபிசுத்திருக்கும்.

### வெளிநாடுகள் தரும் மாயை

வெளி நாடுகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள் பெருந் தொகையான அளவில் பணம்




மட்டுமல்ல, போராட்டத்திற்குத் தேவையான சர்வதேச ஆதரவையும் இவர்களே திரட்டுகின்றனர். போராட்டத்திற்கான பணத்தையும், சர்வதேச ஆதரவினையும் திரட்டி வரும் சர்வதேச தமிழ் சமூகம் இறுதித் தீர்வு எவ்வாறு அமைய வேண்டுமென்பது குறித்து ஓர் தெளிவான போக்கினைக் கொண்டிருக்கிறதா? என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

தாயகத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு வெளி நாட்டில் வாழும் தமிழர்களின் நடவடிக்கைகள் பெரும் எதிர்பார்ப்பினைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. வெளிநாடுகளில் வாழும் தமிழர்களால் நடத்தப்படும் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பல செய்தித் தொடர்பு அமைப்புக்கள் போன்றன வெளிநாட்டு அரசுகளைத் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்திற்குச் சார்பாகத் திரட்டி வருகின்றன என்ற பெரும் மாயை தாயகத்தில் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

வெளிநாடுகளில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருபவன் என்ற வகையிலும், இலங்கை அரசியல் நிலவரம் தொடர்பாக ஓரளவு ஆர்வம் உள்ளவன் என்ற வகையிலும் இந்த மாயைத் தோற்றம் தொடர்பாக சிலவற்றைப் பகிர்ந்து கொள்வது பொருத்தமானது என நம்புகிறேன். தமிழ் பேசும் மக்களின் போராட்டம் தொடர்பாக வெளி நாட்டில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் உண்மையான பங்களிப்பு என்ன? என அறிய விரும்பும் ஒருவருக்கு இவை சில தகவல்களைத் தரலாம்.

### சமூக நிறுவனங்கள்

இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எமது வாழ்க்கை, எமது தீர்மானங்கள், எமது நடவடிக்கைகள் யாரால் தீர்மானிக்கப்படுகின்றன என்பதை ஆராய்வோமானால் நிச்சயமாக எம்மால் அதாவது தனி மனிதனால் தீர்மானிக்கப்படுவதில்லை என்பதை அறுதியிட்டுக் கூறலாம். எமக்கு எவ்வாறான கல்வி தேவை என்பதை அரசாங்கமே தீர்மானித்து அதற்கேற்ற வகையில் பாடத்திட்டத்தினைத் தயாரித்து அமுல்படுத்துகிறது.

ஒருவர் எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்பதை எவ்வாறு கல்வி புகட்டப்பட வேண்டும்? என ஆசிரியருக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் சிந்திக்கும் போக்கு தீர்மானிக்கப்படுகிறது. தனி மனிதன் எவற்றைச் செய்யலாம்? எவற்றைச் செய்யக்கூடாது? என்பதை நாட்டின் சட்ட மூலங்கள் மூலம் தனி மனிதனின் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படுகிறது. இவ்வாறு எமது நடவடிக்கைகளை நாட்டின் பலமான அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார நிறுவனங்களே தீர்மானிக்கின்றன.

எனவே ஒரு பலமான கருத்தை செயல் உருப்பெறச் செய்ய வேண்டுமெனில் பலமான மக்கள் பங்களிப்புள்ள நிறுவனம் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறான நிறுவனம் ஒன்று சகல மக்களினதும் பங்களிப்புக்கொண்டதாக அமைவது அவசியம். இந்த வகையில் நோக்கும் போது வெளி நாடுகளில் வாழும் தமிழர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக ஏதாவது தீர்மானங்களை நிறுவன ரீதியாக மேற்கொள்கிறார்களா? எனப் பார்த்தால்

இல்லை என்றே கூறலாம்.

அவ்வாறானால், வெளி நாடுகளில் செயற்பட்டு வரும் பல்வேறு சமூக நிறுவனங்கள் உண்மையில் நிறுவனங்கள்தானா? என்ற கேள்வி எழுகிறது. இவைகள் பெயரளவில் நிறுவனங்களே தவிர அங்கு பிரச்சினைகளை விவாதித்து முடிவு செய்யும் அணுகுமுறை கிஞ்சிற்றும் இல்லை. இதற்குக் காரணம் என்ன?

### கட்டாக்காலி அரசியல் அராஜகம்

இங்கு சமய நிறுவனங்கள். கல்வி புகட்டும் நிறுவனங்கள், கலாச்சார நிறுவனங்கள், அரசியல் சார்பு நிறுவனங்கள் என பல ஸ்தாபனங்கள் உள்ளன. இவை யாவற்றிலும் அரசியல் புகுந்து விளையாடுகிறது. சமய நிறுவனங்களில் அரசியல் இருக்காது. ஆனால் அரசியல் ஸ்தாபனத்தில் இருப்பவர் சமய நிறுவனத்தில் செயற்படுகிறார்.

இதனால் அரசியல் சமயத்தில் புகுந்து விடுகிறது. சில ஸ்தாபனங்கள் ஜனநாயக ரீதியாக வாக்கெடுப்பு நடத்தி உத்தியோகஸ்தர்களை தெரிவு செய்வதாக இருந்தால், பொதுக் கூட்டங்கள் வழமைக்கு மாறாக பெருந்தொகை அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும். அரசியல் தன் கைவரிசையைக் காட்டிவிடும்.

பத்திரிகைகளும் இதற்கு விதி விலக்கு அல்ல. பத்திரிகைகள் பரபரப்பான செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. மரணங்களின் தொகையை மிகைப்படுத்துவதன் மூலம் அரசியல் தீர்வு அண்மித்து விட்டதாக ஓலம் போடுகின்றன. ஏதாவது பத்திரிகை சற்று வித்தியாசமாக சிந்திக்கும்படி ஏதாவது எழுதிவிட்டால் மறுநாள் அப் பத்திரிகைக்கு விளம்பரம் நிறுத்தப்பட்டுவிடும். இதே போன்ற நிலை வானொலி சேவைகளுக்கும் நேரிடுகிறது. பத்திரிகை, வானொலி என்பன விளம்பரத்தில் தங்கி இருப்பதால் செய்திகளை நியாயமான விதத்தில் பிரசுரிக்கவோ அல்லது விமர்சனம் செய்யவோ முடியாத நிலை உள்ளது.

### சொந்தக்காரர்களிடம் சுதந்திரத்தை இழந்தவன் தமிழன்

தனி மனிதன், பத்திரிகை, வானொலி என்பன தமது கருத்துகளைச் சுதந்திரமாகத் தெரிவிக்க முடியாத நிலை உள்ளது. தனது சொந்தக் கருத்துகளைச் சுதந்திரமாகத் தெரிவிக்க முடியாத மனிதனே இங்கு போருக்குப் பணம் கொடுக்கிறான். சுதந்திரமாகப் பிரசுரிக்கவோ அல்லது விமர்சிக்கவோ முடியாத பத்திரிகைகளும் வானொலிகளும் ஊதுகுழலாகச் செயற்படுகின்றனவே தவிர எந்த விதத்திலும் ஆக்க பூர்வமான கருத்துக்களையோ விவாதங்களையோ முன்வைப்பதில்லை.

இவ்வாறான ஓர் இறுக்கமான சூழ்நிலை வெளி நாடுகளில் நிலவி வருகிறது. இந்த இறுக்கமான சூழ்நிலைக்குக் காரணம் பயமேயாகும். பயம் என்பது இருக்கும் வரை சுதந்திரமான கருத்துப் பரிமாறலுக்கு வாய்ப்பே இல்லை. சுதந்திரமான கருத்துப் பரிமாறல் இல்லாதவரை மக்களின் சுதந்திரமான அபிப்பிராயத்தை அறிய முடியாது. இவ்வாறான துர்ப்பாக்கிய சூழ்நிலை வெளி நாடுகளில் நிலவி வரும்போது வெளி நாடுகளில் வாழும் மக்கள் அதனை ஆதரிக்கிறார்கள், இதனை ஆதரிக்கிறார்கள் எனக் கூக்குரல் எழுப்புவது வெறும் வெற்றுக் கோஷம்தான்.

இவ்வாறான சூழ்நிலையில் வெளி நாடுகளில் வாழும் தமிழர்களின் விருப்புகள், அபிப்பிராயங்கள், தீர்மானங்கள் என்பன ஒரு சிலரின் தீர்மானங்களாகவும், இத் தீர்மானங்களை நிறைவேற்ற ஒரு மக்கள் கூட்டம் தொடர்ச்சியாக உதவி வருகிறார்கள் என்பதுவும் உண்மை நிலையாகும்.

### ஒரு மாங்காயால் இரு கல்லை அடிக்கும் திறமை

ஒரு மக்கள் கூட்டம் இவ்வாறு தொடர்ச்சியாக ஆதரவு அளிப்பதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. வெளி நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி உள்ளவர்களுக்கு இலங்கையில் தொடர்ந்து பிரச்சினைகள் இருக்க வேண்டும் என்று அவர் எப்போதும் உள்ளூர நினைப்பது உண்டு. அது மட்டுமல்லாமல் அவை உக்கிரமாக இருக்க வேண்டும் என்ற தேவையும் உண்டு. இவ்வாறான ஓர் சூழ்நிலைதான் அவர்களை இங்கு நீடிய காலம் தங்க வாய்ப்பைக் கொடுக்கிறது. எனவே போர் முடிவுக்கு வருவதற்கான எந்த முயற்சிகளையும் தொடர்ச்சியாகச் சந்தேகிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு. எனவே இவர்கள்



போருக்கான ஆதரவை வழங்குவதோடு பிரச்சினை தீர்வதற்கான அறிகுறிகள் தென்படுமானால் கடினமான கோரிக்கைகளை அதிகளவு அழுத்திக் கோரவும் தொடங்குவர்.

தமிழ் பேசும் மக்களின் போராட்டங்கள் ஆரம்பமான காலகட்டங்களில் இலங்கை அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இங்கிலாந்தில்கூட உயிரோட்டம் கொண்டவையாக அமைந்திருந்தன. உதாரணமாக இலங்கை இங்கிலாந்து கிரிக்கட் போட்டி இங்கிலாந்தில் இடம் பெற்றபோது விளையாட்டு மைதானத்திற்குள் சென்று கிரிக்கட் ஆடும் தளத்தை முற்றுகையிட்டு இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்கெதிரான கோஷங்கள் எழுப்பி பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

தற்போது அந்த நிலைமை இல்லை. விமானம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அதில் இலங்கை எதிர்ப்பு பதாகையை பறக்கவிட்டு இரண்டொரு தடவை மைதானத்தை வலம் வருவதுடன் காரியம் முற்றுப் பெறுகிறது. இங்கு ஆர்ப்பாட்டம் என்பது பணம் சார்ந்ததாக உள்ளதே தவிர மக்களின் மனம் சார்ந்த உண்மையான பங்களிப்பாக இருக்கவில்லை. முன்னர் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் என்றால் ஆயிரக் கணக்கானோர் தாமாகவே ஊர்வல மைதானத்திற்கு வருகை தருவார்கள்.

தற்போது தனியார் பஸ் வண்டிச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டு ஏற்றி இறக்கப்படுகிறார்கள். இதன் மூலம் ஓர் எண்ணிக்கை ரீதியான ஆர்ப்பாட்டம் என்ற அளவிலேயே இம் முயற்சிகள் முடிவடைகின்றன.

### நுரை தின்று பசியாறுமா?

தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பாக பெருமளவு ஆதரவு வெளி நாடுகளில் உள்ள தமிழர்கள் மத்தியில் இருந்தபோதும் அந்த ஆதரவினால் ஏதாவது பாரிய அளவில் சாதிக்க முடியுமா? எனப் பார்த்தால் சந்தேகமே அதிகளவு மிஞ்சுகிறது. இந்த ஆதரவு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதன் சாராம்சமே மேலே தரப்பட்ட குறிப்புகளாகும்.

சகல நடவடிக்கைகளையும் ஓர் மிகைப் படுத்தப்பட்ட வடிவத்தில் எடுத்துச் செல்லப் படுவதால் எழுந்துள்ள நிலமைகளுக்கு உதாரணமாக பின்வரும் உதாரணத்தைக் கூறலாம்.

**நெல்சன்**

விடுதலைப் புலிகளின் சர்வதேச தலைமைக் காரியாலயம் இலண்டனில் இருப்பதால் பிரித்தானிய அரசை அவர்கள் எப்படியும் மிரட்டி எடுத்து விடுவார்கள் என்ற நினைப்பு. அவ்வாறான மிகைப்படுத்தப்பட்ட பிரச்சாரங்களால் உருவானதாகும்.

இச் சர்வதேச காரியாலயம் பணம் வசூலிக்கவும், அவ்வப்போது கூட்டம் அமைத்து ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட தீர்மானங்களை வாசித்து ஒப்புதல் பெற்றுக் கொண்டதாக பிரகடனப்படுத்தி பிரித்தானியாவில் வாழும் தமிழர்கள் தீர்மானங்களைப் படித்து. விவாதித்து, ஏற்றுக் கொண்டார்கள் என்ற மாயைத் தோற்றத்தை கொடுப்பதாகவுமே உள்ளது.

வெளி நாடுகளில் வாழும் தமிழர்கள் தேசியப் பற்றுக் கொண்டவர்கள். தமிழ்த் தேசிய இனம் பூரண உரிமை பெற்ற இனமாக வாழவேண்டும் என்ற அவாவுடையவர்கள். அனால் இந்த அவாவினை நிறைவேற்ற தமது நாளாந்த, தனிப்பட்ட நடவடிக்கைகளில் ஏதாவது உருப்படியாகச் செய்கிறார்களா? எனப் பார்த்தால் அவை முற்றிலும் வேறுபட்டதாக இருப்பதைக் காணலாம்.

வெளி நாடுகளில் வாழும் பணம் படைத்த சிலர் தமது மூலதனங்களை தற்போது கொழும்பில் முதலீடு செய்து வருகின்றனர். வீடுகள் வாங்கி வருகின்றனர். கொழும்பில் வாழ்பவர்கள் நிரந்தரமாக அங்கு தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகள் அவர்களது தமிழ்த் தேசிய அபிலாஷைகளை எந்த விதத்திலும் பிரதிபலிக்கவில்லை. பதிலாக போராட்டம் தொடர்பான சந்தேகங்களின் எண்ணப் போக்கினைப் புலப்படுத்துகிறது. அதாவது விடுதலைப் போராட்டத்தின் மீதும் அதன் எதிர்காலம் தொடர்பாகவும் அவர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை இவை கோடிட்டுக் காட்டுகின்றன.

எனவே நிறுவன மயப்படுத்தப்படாத அமைப்புகளும், விவாதத்திற்குட்படுத்தப்படாத தீர்மானங்களும் சர்வதேச தமிழ்சமூகத்தின் அபிப்பிராயங்களாக வெளியிடப்படும் இம் மாயைத் தோற்றமும் நிர்ணயகரமான நிகழ்ச்சிகள் சில நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் பெரும் ஆபத்தான நிலமைகளைத் தோற்றுவிக்கலாம். ■

படிப்பகம்

www.padippakam.com



# அரசியல் கோரிக்கைகளும் தமிழர்களின் குழறுபடியான அரசியல் வரலாறும்

இலங்கையில் 1815ம் ஆண்டு கண்டிராச்சியம் பிரித்தானியரின் ஆளுகைக்குக்கீழ் கொண்டுவரப்பட்டதன் பின்னரே இலங்கையானது நவீன அரசியல் யாப்பு சட்டம் என்னும் வரைமுறையின் கீழ் ஆளப்பட்டு வந்திருக்கிறது.

அதன் பின்னர் பல்வேறு அரசியல் யாப்பு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள போதிலும் 1988 வரை அதாவது சுமார் 170 வருடங்கள் இலங்கையானது ஒற்றையாட்சி அமைப்பு முறையின் கீழேயே நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது.



திரு. செல்வநாயகம்

இன்றைக்கும் இலங்கையில் இருப்பது அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒற்றையாட்சி முறையேயாயினும் 1988 இல் மாகாணசபை ஆட்சி முறை இலங்கையில் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல் அமைப்பில் சமஷ்டி அமைப்புக்கான வித்துக்கள் ஏற்கனவே இடப்பட்டுவிட்டன என்றே கூறுதல் வேண்டும்.

1987ம் ஆண்டின் இந்திய இலங்கை சமாதான உடன்பாட்டின் மூலம் இலங்கையின் அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு பெரும் திருப்புமுனை என்றே கூறுதல் வேண்டும்.

மாகாணசபை அமைப்பு முறையானது இலங்கையில் கடந்த 10 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது. இவ்வமைப்பு முறையானது சிறப்பாக செயற்படுகிறதா? இல்லையா? என்பது வேறொரு விவாதமாகும். இவ்வமைப்பு முறையானது இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட ஒரு பெரும் அரசியல் நெருக்கடியின் தவிர்க்கமுடியாத விளைவாக உருவானது.

இலங்கையின் நிர்வாக அமைப்பில் சீர்திருத்தம் என்ற உணர்வுடன் மாகாணமுறை உருவாக்கப்படவில்லை. உண்மையில் மாகாணம் என்பது 1988ற்கு முன்னர் சட்டபூர்வமாக ஒரு நிர்வாக அலகாகக் கூட இருக்கவில்லை. புவியியல் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக மட்டுமே இருந்தது.

இலங்கையில் இனமுரண்பாடு உச்ச நிலையை அடைந்த பொழுது அதற்கு ஓர் அரசியல் தீர்வாகவே இவ்வமைப்பு முறை இங்கு உருவானது. அதேவேளை இந்த அமைப்பு முறையானது இலங்கையின் அரசியல் தலைவர்களின் உளப்பூர்வமான விருப்பத்தின் உருவாக்கமாக இது ஏற்படவில்லை. மாறாக இந்தியாவின் நெருக்குதலின் உருவாக்கம் என்றே கருதப்படுகிறது.

எவ்வாறாயினும் இலங்கையின் அரசியல் அமைப்பில் தவிர்க்க முடியாததொரு வடிவமாக இந்த மாகாண சபைகள் அமைப்பு நிலைப்பட்டுவிட்டதென்றே கூறுதல் வேண்டும்.

இலங்கையின் ஆட்சி நிர்வாகமானது பிரித்தானியர்கள் உருவாக்கிய அரசியல் யாப்பின்படி அவர்களின் நேரடி அரசியல் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு சுமார் 40ஆண்டுகளின் பின்னரே இந்தியா முழுவதும் ஓர் அரசியல் யாப்பின் கீழ் பிரித்தானிய முடிக்குரிய ஆட்சியமைப்பின் நேரடி அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

## கொழும்பை ஆண்ட தமிழர்கள்

இந்தியாவில் மாகாணசபை ஆட்சி முறையானது 1935 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் இந்திய அரசின் நிர்வாகத்தில் இந்தியாவின் உள்நாட்டு அரசியற் சக்திகள் பரவலாகப் பங்கு பெறுகின்ற நிலைமைகள் உருவாக்கப்பட்டன.

ஏறத்தாழ இதே சமகால கட்டத்தில் இலங்கையிலும் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா போன்றவர்களினால் மாகாணசபை ஆட்சி முறை சமஷ்டி கோரிக்கை என்ற வடிவில் வேண்டப்பட்டது. ஆனால் அன்று அந்தக் கோரிக்கைக்கு தமிழர்கள் மத்தியிலிருந்து எந்த வரவேற்பும் இருக்கவில்லை.

அன்றைக்கு அரசியல் ஆதிக்கம் என்பது எவ்வாறு கரையோர சிங்களத் தலைவர்களின் கையில் இருந்ததோ அதே போலவே தமிழர்களின் தலைமையும் கொழும்பை மையமாக கொண்டிருந்த இராமநாதன், அருணாச்சலம், மகாதேவா, பொன்னம்பலம் போன்ற அரசியல் தலைவர்களின் கையிலேயே இருந்தது.

அப்பொழுது இந்தத் தமிழ் தலைவர்கள் இலங்கையில் மாகாணசபை அதாவது சமஷ்டி அமைப்பு உருவாக்கப்பட்டால் கொழும்பில் இருக்கும் தமது அரசியல் பொருளாதார ஆதிக்கத்தை இழக்க வேண்டியேற்படும். தமிழர்களின் அரசியல் என்பது கொழும்பிலிருந்து தூர விலகி வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் தலைமைகளின் அரசியலாக மாறி விடும் என அஞ்சினர்.

1936ம் ஆண்டு தனிச்சிங்கள மந்திரி சபை அமைக்கப்பட்டபோதிலும் 1944ம் ஆண்டு தனிச் சிங்கள சட்டத்திற்கான பிரேரணை அப்போதைய சட்டசபையில் முன்வைக்கப்பட்ட போதிலும்கூட அன்றைய கொழும்பு மைய தமிழ் தலைவர்கள் தங்களின் அரசியல் நிரந்தரம் பற்றி சந்தேகம் கொள்ளவில்லை.

1947ம் ஆண்டு சோல்பரி அரசியல் கமிஷன் விசாரணைகளின் போது தமிழ் பெரும் அரசியல் தலைவர்கள் சமஷ்டி அமைப்பு முறையை (மாகாணசபை அமைப்பு, மாநில ஆட்சி அமைப்பு என என்ன பெயர் கொடுத்தாலும் ஒன்றே) இலங்கையில் உருவாக்கும்படி கோரவில்லை.

1949ம் ஆண்டு செல்வநாயகம், வன்னியசிங்கம், அமிர்தலிங்கம் போன்றவர்களின் தலைமையில் தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்ட பொழுது அது சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தே தொடங்கியது. இக்கட்சி ஆங்கிலத்தில் தனது பெயரை Federal Party (சமஷ்டி கட்சி) எனவும் தமிழில் தமிழரசு கட்சி (Party for Tamil State) எனவும் பெயர் வைத்துக் கொண்டதன் மூலம் இரட்டை வேடதாரித்தனத்தையே அது பிரதிபலித்தது எனலாம்.

உயர் மட்டத்தோர் மத்தியில் இக்கட்சி தன்னையொரு சமஷ்டிக் கோரிகைக் கட்சி மாதிரிக் காட்டிய போதிலும் பரந்துபட்ட தமிழர்கள் மத்தியில் தமிழர்களுக்கென ஓர் தனி அரசைக் கோருகின்ற கட்சியாக, தமிழர்கள் இனரீதியான உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு அரசியலாக்கும் கட்சியாகவே அது செயற்பட்டது.

## தி.மு.கவின் சாயலில் தமிழரசுக் கட்சி

இதே சமகாலகட்டத்தில் இந்தியாவில் உருவான திராவிட முன்னேற்றக்கழகத்தின் தமிழின உணர்ச்சி அரசியலும் பிரச்சாரமும், அதன் சினிமாக் கலையும் இங்கே தமிழரசுக் கட்சிக்கு மக்கள் ஆதரவை வெல்லுவதற்கு மிகவும் பக்க துணையாக இருந்தது. அன்றைய தமிழ் நாட்டு அரசியலில் திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வாறு அரசியல் பிரச்சாரங்களை செய்ததோ அதன் பிரதிபிம்பமாகவே இங்கு தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளும், பிரச்சாரங்களும் அமைந்தன.



S.W.R.D. பண்டாரநாயக்கா

அங்கு பெரியார் இங்கு செல்வநாயகம். அங்கு அண்ணாத்துரை இங்கு அமிர்தலிங்கம், அங்கு கருணாநிதி இங்கு ராஜதுரை, அங்கு நின்ற எம்.ஜி.ஆர் சினிமாவினூடாக இங்கும் நின்றார். தமிழர்கள் மத்தியில் பெரும்பான்மையானவர்கள் தமிழரசுக் கட்சியை இலங்கைத் தமிழர்களின் திராவிட முன்னேற்றக் கழகமாகவே பார்த்தனர்.

## அடிப்படை இலக்கில் இரண்டும் வேறுவேறு



சேர்.பொன். அருணாச்சலம்

எவ்வாறாயினும் திராவிட முன்னேற்றக்கழகத்திற்கும் தமிழரசுக் கட்சிக்கும் அடிப்படையில் ஒரு வேறுபாடு இருந்தது. திராவிட முன்னேற்றக்கழகம் சென்னை மாகாணத்தின் (இதுவே பின்னர் தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது) ஆட்சியைத் தேர்தல் மூலம் பிடிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. தி.மு.க வுக்கு அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுதல் என்னும் திட்டவட்டமான அரசியல் குறிக்கோள் இருந்தது.

ஆனால் தமிழரசுக் கட்சிக்கோ பாராளுமன்றத்திற்கு பிரதிநிதிகளாக செல்லுதல் என்பதைத் தவிர அரசியல் அதிகாரம் சம்பந்தப்பட்ட உறுதியான குறிக்கோள் எதுவும் அதனிடம் இருக்கவில்லை. சமஷ்டி கோரிக்கையை அது கொண்டிருந்த போதிலும் அதனை மக்கள் மத்தியில் ஒரு இயக்கமாக்குவதிலோ மக்கள் மத்தியில் அது பற்றிய தெளிவான புரிதலை ஏற்படுத்துவதிலோ அதை நோக்கி தனது இயக்கத்தை முன்னெடுப்பதிலோ பெரிதும் அக்கறை காட்டவில்லை.

அக்கட்சியின் சில குறிப்பிடக் கூடிய தலைவர்களைத் தவிர அதன் பெரும்பான்மையான தலைவர்கள் மத்தியிலோ அல்லது அதன் உறுப்பினர்கள் மத்தியிலோ தமிழின அரசியல் உணர்ச்சி என்பது காணப்பட்டதே தவிர சமஷ்டி கோரிக்கை பற்றியோ மாநில சுயாட்சி பற்றியோ புரிதல் எதுவும் இருக்கவுமில்லை, அவ்வாறான ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சி எதையும் அந்தக் கட்சித் தலைவர்கள் மேற்கொள்ளவுமில்லை.

தமிழரசுக்கட்சியினர் பரந்துபட்ட மக்களிடமிருந்து தேர்தற்கால ஆதரவைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு மட்டுமே செயற்பட்டனர். தமிழரசுக் கட்சியினர் ஒரு பரந்துபட்ட ஸ்தாபனமாக ஆக்கிக் கொள்ளும் செயற்பாடு எதனையும் கொண்டிருக்கவில்லை. அப்படியான எந்த நோக்கமும் அவர்களிடம் எந்த வேளையிலும் இருக்கவில்லை. அன்றைய அரசியலில் தலைவர்கள் பெரும்பாலும் பிரபலமான சட்டத்தரணிகளாகவே இருந்தனர். அவர்களுக்கு அரசியல் என்பது பகுதி நேர அல்லது ஓய்வு நேர விவகாரமாகவே இருந்தது.

இதனால் அவர்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம், உள்ளூராட்சி சபைகளுக்கு உறுப்பினராதல் என்பதைத் தவிர மேலதிகமான அரசியற் சாதனை பற்றிய இலட்சியங்கள், கனவுகள், ஆசைகள் என இருக்கவில்லை. சமஷ்டியைக் கூட பாராளுமன்றத்தில் பேரம் பேசும் ஆற்றலினூடாகப் பெறுதல் என்பதைத் தவிர வேறு வழிமுறைகளுக்கு அவர்களை தனிப்பட்ட நிலைமைகள் இடம் கொடுக்கவில்லை.

முழுநேர அரசியல் என்பதற்கு அவர்கள் எப்போதும் தயாராக இருக்கவில்லை. முழு நேர ஊழியர்களாக தலைவர்களைக் கொண்டிருக்காமல் ஒரு பரந்துபட்ட அரசியல் ஸ்தாபனம் இருக்க முடியாது அதனை வேறொரு வகையில் கூறினால், முழுநேர ஊழியர்களாகச் செயற்படத் தயாராக இல்லாதவர்களை பரந்துபட்ட ஓர் அரசியல் ஸ்தாபனம் தலைவர்களாக வைத்திருக்காது. இதனால் தமிழரசுக் கட்சியும் ஒரு பிரமுகர்குழுவின் கட்சியாகவே இருந்தது.

ஆரம்பத்தில் ஓர் அரசியல் இயக்கம் போலச் செயற்பட்டு வந்தாலும் 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தோடு மக்களை ஒருங்கிணைத்த ஓர் அரசியல் இயக்கம் என்பது அவர்களின் தனிப்பட்ட நிலைமைகளுக்குப் பொருத்தமற்றதாகவே அமைந்தது.

இதனால் பாராளுமன்றம், உள்ளூராட்சிச் சபைகள் என்ற எல்லைக்கு அப்பால் அவர்களால் செயற்பட முடியாது போயிற்று. வெளிக்கள அரசியல் நடவடிக்கை என்பது தமிழரசுக் கட்சியினரைப் பொறுத்த வரையில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை நடவடிக்கைகளாகவே மாறின.

அதேவேளை தங்களுக்கு அப்பால், தங்களின் நேரடிக்கட்டுப்பாட்டில் இல்லாமல் ஓர் அரசியல் இயக்கம் இயங்குவதையும் அவர்கள் விரும்பவில்லை. தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி என்று ஒரு அமைப்பைக் கொண்டிருந்த போதிலும் அதனைக் கூட சுயாதீனமாக வன்முறையற்ற பாதைகளில் செயற்பட வழிகாட்டவில்லை. அதனையும் தமது தேர்தல் ஆதரவு வேலைகளுக்கான ஒரு கருவி அமைப்பாகவே வைத்திருந்தனர். அதனால் அதுவும் தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலகட்டங்களில் வேலையற்ற அமைப்பாகவே ஆக்கப்பட்டது.



திரு. பொன்னம்பலம்

தனது சமஷ்டிக் கொள்கையை நடைமுறையாக்குவதற்கு பாராளுமன்ற பேரத்தை மட்டும் நம்பும் கட்சியாக தமிழரசுக் கட்சி ஆனது. தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது அதன் சமஷ்டிக் கொள்கைளைப் பற்றி ஒரு கொள்கை வெளியீடு ஒன்றை வெளியிட்டிருந்த போதிலும் அதற்குப் பின்னர் அந்த வெளியீடு அந்தக் கட்சியின் செயற்பாடுகள் எதனோடும் தொடர்புபடாமற் போய் விட்டது. அதை விரிவுபடுத்தி விளக்கவில்லை, அதன் பூரண வடிவம் பற்றி எதுவும் சொல்லவில்லை. அது எவ்வாறு, எவ்வாறான கட்டங்களினூடாக நடைமுறையாகலாம் என்பதைப்பற்றி அக்கட்சியின் பிரதான தலைவர்களிடத்தில் கூட எந்தவிதமான கருத்துக்களும், நிலைப்பாடுகளும் இருந்ததற்கான அறிகுறிகள் எதுவும் கிடையாது.

சமஷ்டி என்ற கோரிக்கைக்கு ஒரு இயக்கத்தை நடாத்தாத தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றப் பதவிகளுக்காக செல்வாக்குமிக்க ஜி.ஜி. பொன்னம்பலத்தை எதிர்க்கவேண்டியிருந்தது. பொன்னம்பலம் சமஷ்டியை எதிர்த்து வந்தார்.

தமிழின உணர்ச்சி அரசியலை சூடு குறையாமல் வைத்திருந்தால் தவிர பொன்னம்பலத்தை எதிர்த்து போட்டி அரசியல் நடாத்துவது தமிழரசுக் கட்சியினருக்கு அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை.

**அடுத்த இதழிலும் தொடரும்**

## தோழர் இந்திரஜித் குப்தா




**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும், இந்திய சுதந்திரத்திற்காகவும் உழைக்கும் மக்களின் விடிவுக்காகவும் போராடிய தோழர் இந்திரஜித் குப்தா அவர்களின் மறைவுக்கு கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.**

**கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பட்டதாரியான அவர் இந்தியாவின் உள்துறை அமைச்சராகப் பெருமைமிகு பதவியை வகித்தார்.**

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய உபகண்டத்தை உலுக்கிய பூகம்பம்

மனித குலம் பூமியில் தோன்றிய காலம் முதல் இயற்கையின் சீற்றத்துக்கு முகம் கொடுத்து வருகிறது. பூகம்பங்களினாலும், பெரு வெள்ளத்தினாலும், புயலினாலும், பெருங் காட்டுத் தீயினாலும் நோய்களினாலும் பெரும் அழிவுகளைச் சந்தித்திருக்கிறது. பஞ்ச பூதங்களின் சீற்றம் பல்வேறு விதமாக மனித குலத்திற்கு பேரனர்த்தங்களை விளைவித்திருக்கிறது.

இந்திய உப கண்டத்தில் இலங்கையையும் உள்ளடக்கிய லெமூரியாக் கண்டம் கடலால் கொள்ளப்பட்டதாக பழங்கதை. இது கதை மட்டுமல்ல புவியியல் அறிஞர்களும் இதனை உறுதிப்படுத்துகிறார்கள்.

தென்னகத்தின் கரையிலிருந்த புகழ்பெற்ற துறைமுக நகரம் மட்டுமல்ல சிலப்பதிகாரம், மனிமேகலை போன்ற உயர் தமிழ் இலக்கியங்களின் களமான காவிரிப் பூம்பட்டினத்தை கடல் கொண்டது.

**“குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள”** என லெமூரியாக் கண்டத்தின் அழிவு சங்க இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் எஞ்சிய சுவடுகளாக மன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் தொடர் திட்டுக்களாக தீடைகள் காணப்படுகின்றன.

இராமாயணத்தில் கூறப்பட்ட இராமர் அணையின் எச்சங்களே இவை என்பது இராமாயணத்தில் இருந்து ஊகிக்கப்படுகின்றது. இராமேஸ்வரத்திலிருந்து இலங்கையை நோக்கி நீண்டிருக்கும் தனுஷ்கோடி நான்கு தசாப்தங்களுக்கு முன்னர்தான் கடற் பெருக்கெடுப்பால் அழிக்கப்பட்ட நகரமாகியது. அழிக்கப்பட்ட கட்டிடங்களின் எச்சங்களுடன் வெட்டவெளி மணற்பரப்பாக இலங்கை நோக்கி இந்தியா நீட்டியிருக்கும் கரமே தனுஷ்கோடி.

இலங்கையிலிருந்து இந்தியாவை நோக்கி நீண்டிருக்கும் கரமான மன்னார் தீவுக்கும் தனுஷ்கோடியின் முனைக்கும் இடையில் உள்ள இடைவெளி வெறுமனே முப்பது கிலோ மீற்றர்கள்தான் இதனால்தானோ என்னவோ பாட்டின் புதல்வன் பாரதி “சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்” என்றான்.

இந்த உலகின் ஆன்மீக கலாச்சாரத்தின் தொட்டில் மட்டுமல்ல கட்டிலும் கூட இந்தியாதான். வானவில்லின் பல்வேறு நிறங்களின் ஒன்றிப்பு போல் நின்று உலகிற்கே, சேர்ந்து வாழும் பொறுமைக்கு முன்னுதாரணமாகத் திகழும் பாரதம் பல்வேறு ஞானிகளையும் அறிஞர்களையும், விஞ்ஞானப் பெட்டகங்களையும், கலாச்சாரக் கருவூலங்களையும் இவ்வுலகுக்கு வழங்கியது.

எமக்குள் இனம் புரியாத மனவெழுச்சியைத் தோற்றுவிக்கும் அந்த மாபெரும் தேசத்தில், மனித குலத்தின் தேடுதலுக்குரிய ஆர்வமூட்டும் எண்ணிறந்த விடயங்களை அது தன்னுள் தக்க வைத்திருக்கிறது.

ஆம்! அந்த மாபெரும் நாட்டில் குஜராத் மாநிலத்தில்தான் **“கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் செய்வோம்”** என்ற அகிம்சை தத்துவத்தை உலகுக்கு போதித்த பெருமகன் அண்ணல் மகாத்மா காந்தியடிகளை பெற்றெடுத்த போர் பந்தர் கிராமமும் குஜராத்தில்தான் இருக்கிறது. திசைக்கொரு மாகாணமாகவும், ஐஞ்நூறுக்கும் மேற்பட்ட சமஸ்தானங்களையும் கொண்டிருந்த இந்தியாவை ஒரு நாடாகப் பார்த்த சர்தார் வல்லபாய் பட்டேலும் இந்த குஜராத்தவர்தான்.

பல ஆயிரம் வருட மனித வாழ்வியலின், நாகரீகம் படைத்த மனித கலாச்சாரத்தின் களஞ்சியமாக இருந்த அந்த மண் தன்வாயைப் பிளந்து சில விநாடிகளில் பல நூற்றுக்கணக்கான குழந்தைகளையும், பெண்களையும், ஆண்களையும், வயோதிபர்களையும் எந்தவித வேறுபாடுமின்றி விழுங்கிக்கொண்டது. கட்டிடங்களால் நிமிர்ந்து நின்ற இடங்களெல்லாம் கற்குவியல்களாக மாறின.

மனித குல வாழ்வின் மீது இயற்கை தொடுத்த இந்த ஈவிரக்கமற்ற தாக்குதலுக்கு முகம் கொடுத்த அந்த மாநிலம் இந்தியாவின் வரலாற்று ஆற்றல்களைக் குவித்து மீண்டும் எழுந்து நிற்க முயலுகிறது.

பல்லாயிரம் பேரைப் பலி கொண்ட அந்த கணங்களிலிருந்து அடுத்த சில நாட்களில் 250சிறிய பெரிய பூகம்பங்கள் ஏற்பட்டுள்ளன. 25 லட்சம் சிறுவர்கள் வீதிக்கு வந்துள்ளார்கள்.

குஜராத்தின் இடிபாடுகளிலிருந்து முதன் முதலில் ஒரு குழந்தை மீட்கப்பட்டது. அந்தக் குழந்தை குஜராத்தின் புனர் ஜென்மத்தின் குறியீடு. அது தன்னை சூழ நேர்ந்த பயங்கரத்தின் மத்தியில் தொடர்ந்து ஒரு மந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருந்ததாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஸ்ரீகோபால கிருஷ்ணகாந்தி கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற குஜராத் பூகம்ப அனுதாபக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இன மத மோதல்கள் பிராந்தியங்களுக்கு இடையேயான முரண்பாடுகள் எல்லாமே இங்கு இரண்டாம் பட்சமாகின்றன. அதனைத்தான் ஸ்ரீ கோபாலகிருஷ்ணகாந்தி அவர்கள் நாம் தென்னாசியா என்னும் பெருங் குடையின் கீழ் இருக்கிறோம் என நம்பிக்கைக் குரலாக வெளிப்படுத்தினார்.




மனிதர்களால் சமூக வாழ்வியலில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அழிவுகள், ஆக்கங்களுக்கப்பால் நாம் மிக முக்கியமான பிரச்சினை ஒன்றை முகம் கொடுக்கிறோம் அதுதான் யதார்த்தமாக இருக்கும் இயற்கையின் அச்சுறுத்தல். அதனால் நிகழும் பேரழிவுகள்.

வங்காள தேசத்தில் அடிக்கடி நிகழும் புயல் வெள்ளம் கூட லட்சோப லட்சம் மக்களைக் காவு கொள்கிறது. இவ்வாறான பேரனர்த்தங்களிலிருந்து மனித குலத்தை பாதுகாப்பது எவ்வாறென்பதே இன்று எம் முன் உள்ள முக்கியமான கேள்வியாகும். இந்தச் சவால் முகம் கொடுக்க வேண்டிய யதார்த்தம்.

இதனை இலங்கையில் உள்ளவர்களும் சற்று உரமாகச் சிந்திக்க வேண்டும். இந்தியாவில் குஜராத்தில்தானே பூகம்பம் நிகழ்ந்தது எங்களது கன்னைக்குள் இல்லையென்று இலங்கையில் ஒரு அலட்சியப் போக்கு காணப்படுகின்றது. அது சுயநலம் கொண்டதாக, குறுகிய எண்ண வட்டத்தை கொண்டதாக, அறிவீனம், மூடத்தனத்தால் ஆட்கொள்ளப்பட்டதாகக் காணப்படுகின்றது. இது வெட்கரமானதும், வேதனையானதுமான நிலையாகும்.

குஜராத்தில் பூகம்பம் என்றவுடன் துடித்துப் போன நெஞ்சங்கள் அநேகம். ஆனால் அது இலங்கையின் துயரமாக வெளிக்கிளம்பவில்லை என்பது துரதிஷ்டமான உண்மை.

ஐயோ என்ற குரலுக்கு இந்தியா ஓடி வரவேண்டும் என்று எதிர் பார்ப்பவர்கள் அவர்கள் எத்தரப்பாக இருந்தாலும் இந்தியா ஒரு மாபெரும்



துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது ஆறுதல் வார்த்தைகளைக்கூட உதிர்க்கவில்லை என்பது துரதிஷ்டமான உண்மையாகும்.

நாங்கள் யாரென்ற அடையாளத்தை இழந்தவர்களாகவே இன்று நின்று கொண்டிருக்கிறோம். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான உறவு தொப்புள்கொடி உறவு. எமது ரத்தமும் தசையுமான ஆன்மீக, கலாச்சார, மொழி பாரம்பரிய உள்ளீடுகள் யாவும் இந்தியாவிடமிருந்து பெறப்பட்டவையே.

பல நாடுகளின் பாராளுமன்றங்களில், செனட் சபைகளில் குஜராத் பூகம்பத்திற்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானங்கள் போடப்பட்டன. ஆனால் அவசரகாலச் சட்டத்துக்கு அப்பால் எதையும் சிந்திக்க முடியா நிலையில் இலங்கையின் பாராளுமன்றம் மிதக்க விடப்பட்ட ரூபா தாழ்ந்து கொண்டிருந்ததால் கலங்கிப் போய் அந்தரித்த நிலையில் அரசாங்கம்.

பாதயாத்திரை மூலமாவது பதவியைப் பிடிக்கலாமா என்ற அவசர நிலையில் எதிர்க்கட்சி. இவ்வாறானவற்றால் இலங்கைக்கு குஜராத்தின் அவலம் தெரிய பல நாட்களாகியது. உலகின் பல அரசாங்கங்களும் தனியார் நிறுவனங்களும் இந்தியாவை நோக்கி உதவிகளைக் குவித்துக் கொண்டிருந்தன.

ஆனால் இலங்கை அரசாங்கமும் கட்சிகளும் சமூகங்களும் வெளிநாடுகளிருந்து பணஉதவிகள் வந்திறங்காதா, சமாதான உதவிகள் வந்திறங்காதா, யுத்தத்துக்கான உதவிகள் வந்திறங்காதா என வெளிநாடுகளிலிருந்து வரவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததால், தாம் கொடுத்துதவ வேண்டிய கடமை தெரியாமற் போய்விட்டது.

கடந்த சில தசாப்தங்களாக ஏதாவதொன்றுக்காக எப்போதும் கையேந்தியே பழக்கப்பட்டுப் போனதால் பக்கத்து வீட்டுக்காரன் ஆபத்தில் உள்ள வேளையிலும் உதவும் எண்ணம் உதிக்காமல் போய்விட்டது. அல்லது யுத்தத்தால் மரணங்களைக் கண்டு மனித நேயங்களெல்லாம் மரணித்துப் போனதன் விளைவா?

பரம்பரைப் பகையாளி பாகிஸ்தான் பறந்து வந்து உதவியது.

பாலஸ்தீனர்கள் ரத்ததானம் செய்தார்கள்.

ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் கிளின்ரன் கூட உதவி திரட்டத் தொடங்கினார். ஆனால் நாம் என்ன செய்தோம்.

அடி மனதில் குடியிருக்கும் வக்கிரமான எண்ணங்களும் விரோதங்களும் இந்தியாவைப் பற்றிய இழிவான எண்ணங்களும் இலங்கையிலிருந்து அக்கறை பெரிதாக எழாததற்கு பிரதான காரணங்களாகுமா? என்ற சந்தேகம் நியாயமாக எழவே செய்கிறது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்த குஜராத்தின் எல்லையில் தான் இந்தியாவும் பாகிஸ்தானும் பதிலுக்குப்பதில் விமானங்களைச் சுட்டு வீழ்த்தின. பாகிஸ்தானே அந்த பூகம்பத்தின் கணங்களில் நெகிழ்ந்து போய், **“நாம் சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ”** என்று உதவிகளைக் குவித்தது.

இனப்பிரச்சினை யுத்தம் என்பனவெல்லாம் எங்கள் மண்டைக்குள் சோலிகளாக நிறைந்திருக்கின்றன என்று கூற இலங்கையர் முனைவோராயின் அது நொண்டிச் சாட்டாகவே இருக்க முடியும். கடந்த 20 வருட யுத்தத்தில் மரணித்த தொகையைப் போல் ஒரு தொகையினர் சில கணங்களில் மாண்டு, புதையுண்டு போயினர். பல பத்து மடங்கு பெரிய தொகையினர் வட இந்திய மாரிகால குளிரில் வெட்ட வெளிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பூமி தான் அதிர்வதற்கு நாடுகளின் மற்றும் இனங்களின் தனித்துவம், இறைமை, சுயநிர்ணய உரிமை என்று பார்ப்பதில்லை. நாமும் இந்த போலித்தனங்களைக் களைந்துவிட்டு தென்னாசிய அளவில் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாகவும், சமூக பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாகவும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது.

வெற்றுப் பிடிவாதங்களில் நாம் மூழ்கி இருக்கையில் ஏற்படும் சில கணநேர இயற்கையின் சீற்றம் நம்மில் லட்சம் பேர்களை செத்துப் போக வைத்துவிடும். நாம் பேரழிவுகளைச் சந்திக்கும் சாத்தியங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன என்பதே குஜராத்தின் அனுபவம்.

எனவே சமூக அரசியல் முரண்பாடுகள் மாத்திரமல்ல இயற்கையின் கோரத்தாண்டவம் தொடர்பாகவும் நாம் சிந்திக்க வேண்டிய காலகட்டம் இது.

யுத்தத்திற்காக, தமது சொந்த தாயகத்தில் உள்ள சிறுவர் சிறுமியரின் மரணங்களை ஊக்குவிப்பதற்காக பணத்தையும் பொருளையும் வாரியிறைக்கும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர் நெஞ்சங்களில், பூகம்பத்தால் அழிவுகளைச் சந்தித்து நிற்கும் குஜராத் மக்களின் துன்பம் சிறிதளவு கூட மன அதிர்வுகளை ஏற்படுத்தவில்லை என்பது மிகவும் வெட்கரமானதும், வேதனையானதும் ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com



# யாழ் - வெள்ளவத்தை பலம் பெற்றோரின் - புலம் பெயர்வு

1983க்கு முன்னர் யாழ்ப்பாணம் சீப்பு பிடுங்காத வாழைக்குலை போல ஒன்றாக, ஒற்றுமையாக கிட்ட தட்ட 11லட்சம் போர் வாழ்ந்த மண்ணாகத் திகழ்ந்தது. தற்போது அதாவது 2001ம் ஆண்டு ஏறத்தாழ 14 இலட்சம் மக்களைக் கொண்டிருக்க வேண்டிய யாழ்ப்பாணம் 4 இலட்சம் மக்களையே தன்வசம் வைத்திருக்கின்றது.

இதில் அரைவாசிக்கு மேல் சுவிஸ், கனடா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி என ஏற்றுமதியாகிப் போயிட்டினம். சீப்பில் இருந்த மிச்ச சொச்ச வாழைப்பழங்கள் எல்லாம் இப்ப கொழும்புக்கு "இம்போர்ட்" ஆகி இருக்கினம்.

இன்றைய நிலையில் கொழும்புக்கு வருவதற்கு புதிதாக 60,000 அப்பிளிகேசன்கள் காத்திருக்கின்றனவாம். யாழ்ப்பாணத்தில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் என மண்ணின் பெருமைகளைச் சொல்லி வாழ்ந்தவர்கள் இன்று தெஹிவளை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கிருலப்பனை, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி, போன்ற இடங்களில் பொலிஸ் பதிவோடு வாழ்கின்றார்கள்.

பிள்ளைகளை, கணவன்மார்களை, சகோதரங்களை வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டு கொழும்பில் வந்து இருக்கினம். இங்கு வந்தவுடன் பொலிஸ் பதிவு டெம்பரரி, "விசா" கார்ட், அயிடின்டிகார்ட் எல்லாவற்றையும் தாலிக்கொடியிலும் பார்க்க பக்குவமாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பஸ் ரூட் நம்பர்கள், கொமினிகேசன் விலாசங்கள், நம்பர்கள், உண்டியல் வர்ற இடங்கள் இவையெல்லாம் தலைகீழ் பாடம்.

அது சரி. கொழும்பில் இவர்களின் பொழுது போக்குகள்தான் என்ன? ஒரு நாளைக்கு ஒரு போன் கோல் அல்லது இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை, கடிதம் தேவையென்றா எழுதுவது. உண்டியல் மாத்துவது, பாங்கில் போடுவது-இதுகளை விட்டால் வேறென்ன வேலை?

### கோவில் திருவிழாக்கள், விஷேசங்கள்

தெஹிவளை விஷ்ணு கோவில், ஆஞ்சநேயர் கோவில், வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி பிள்ளையார் கோவில்கள், மயூராபதி அம்மன் கோயில், கொம்பனித் தெரு சிவசுப்பிரமணியம் கோவில், கப்பித்தாவத்தை மருதானை, கொட்டாஞ்சேனை அம்மன், பிள்ளையார் கோவில்கள், மட்டக்குளி அம்மன் கோவில் இங்கெல்லாம் தைப்பூசத்திலிருந்து மார்கழி திருவெண்பாவை வரை எல்லாம் எங்கட யாழ்ப்பாணச் சனங்கள் நெருக்கடிதான்.

ஒரு காலத்தில் நல்லூர் கந்தசுவாமி, வீரகாளியம்மன், பெருமாள், கைலாயப்பிள்ளையார், தெல்லிப்பளை துர்க்கையம்மன், மாவிட்டபுரம், செல்லச் சந்நிதி என படையெடுத்த யாழ் பக்த சிகாமணிகள் இன்று கொழும்பில் நேரம் தவறாது தோத்திரங்கள் பாடுவதுதான் காலத்தின் மாற்றம்.

### பொழுது போக்குகள் - பெரிய திரை

1983ம் ஆண்டுக்கு முன்னர்- வெலிங்டன், வின்சர், லிடோ, ராஜா, ராணி, மனோகரா, ஸ்ரீதர் ஆகிய தியேட்டர்களில் எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி, ஆகியோரின் படங்களைப் பார்ப்பதற்கு கூட்டங்கள் அலைமோதும். இன்று கொன்கோட், ரொக்ஸி, ஈரோஸ், கிங்ஸ்லி, நவா, சமந்தா, என கொழும்பில் கமல், ரஜனி, அஜித், விஜய், விஜயகாந்த், முரளி படங்கள் பார்க்க போட்டா போட்டி. இதில் கொழும்பில் வாழும் "ரிட்டையர்ட்" வயதிற்கு மேற்பட்டவர்களுக்குக் கூட சிம்ரன், ரம்பா, ஜோதிகா, லைலா, மாளவியா, ஐஸ்வர்யராய் ஆகியோரின் "கிசுகிசுக்கள்" கந்த சஷ்டி கவசத்திலும் பார்க்க நன்றாக மனப்பாடம். "அவள் சிம்ரன் அந்த சிம்பரக்கா டான்ஸ் காரன் பாலசுந்தரத்தையோ, ராஜசுந்தரத்தையோதானாம் முடிக்கப் போறாவாம்" "விஜய் அவசரப்பட்டுப் போச்சு - கொஞ்சம் ஆறுதலா கல்யாணத்தை முடிச்சிருக்கலாம்" இவையெல்லாம் சர்வசாதாரண சம்பாஷணைகள்.

### சிறிய திரை

பகல் 12 மணிக்கு சமையல் முடிஞ்ச கையோட, வெள்ளவத்தை 47வது ஒழுங்கை யோகம்மாவின்ற முதல் வேலை "மகள் சரசு அந்த அன்ரணாவை கொஞ்சம் சுத்தி திருப்பம்மா- சக்தி கொஞ்சம் மங்கலாத் தெரியிது" ரி.வி.க்கு முன்னால் இருக்கிற கதிரையைக் குத்தகைக்கு எடுத்தால் "மல்டி பொன்ட்" ஒரு டின் போட்டு ஒட்டின மாதிரி அதே இடம்தான். குலவிளக்கு, அக்கா, மட்னி படம், தில்லானா தில்லானா, கிருஷ்ணதாசி, கங்கா யமுனா சரஸ்வதி, அம்மா, அர்ச்சனைப் பூக்கள், சத்யா, பணம் பெண் பாசம், கடைசியாக வாழ்க்கை. வாழ்க்கை பானுப்பிரியாவைப் பற்றி கதைத்து, சாப்பிட்டு அவர்கள் வாழ்க்கை ஓயும். ரி.வி. நாடகங்களில் முதல் நான்கு இடங்களும் வாழ்க்கை, கிருஷ்ணதாசி, அர்ச்சனைப்பூக்கள், கங்கா யமுனா சரஸ்வதி, என்ற வரிசையில் இவற்றிற்குத்தான். இதுகளைவிட ஞாயிறு ஸ்பெஷல்களும் உண்டு.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள், உணவுத் தட்டுப்பாடு, தரக்குறைவான உணவு, மருந்தின்மை, தொற்று நோய்க்கிருமிகள் போன்ற பல சுகாதார குறைபாடுகளால் நோய்களுக்கு ஆளாகின்றார்கள். அதோட அங்க மருந்துகளும் பத்தாது, டாக்குத்தர்களும் பத்தாது. ஆனா இங்க சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம், மூட்டுநோவு, மூல நோய், அஜீரணம் எனப் பல பணக்கார வியாதிகள்.

வெளிநாட்டு டெலிபோன் வந்தால், வருத்தத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டும். அரை மணித்தியாலம் கதை. வெள்ளவத்தை, தெஹிவளை, கிருலப்பனை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை எல்லாம் மழைக்கு முளைத்த காளான்கள் மாதிரி இருபத்திநாலு மணிநேர சேவை தனியார் ஆஸ்பத்திரிகள்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள், இலங்கையிலும் இந்தியாவிலும் அகதிகளாக வாழும் தமிழர்கள், கொழும்பில் வாழும் தமிழர்கள், வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் என்று இன்று இலங்கைத் தமிழர்கள் பலராகிவிட்டனர்.

அதிலும் கொழும்பில் இருப்போரைப் பார்த்தால் கொழும்பில் நிரந்தரமாக இருக்கும் தமிழர், கொழும்புக்கு வடக்கு கிழக்கிலிருந்து புலம் பெயர்ந்து பலம் பெற்றிருக்கும் தமிழர், வெளிநாடுகளுக்குப் புலம் பெயர தமது பலங்களைச் செலவழித்துக் கொண்டிருக்கும் தமிழர் என மூன்று பிரிவினர் உள்ளனர். தமிழர்களின் நோக்கும் போக்கும் எல்லையற்று விரிந்து கொண்டிருக்கின்றது. என்னதான் ஆனாலும் தமிழர்கள் யூதர்கள் ஆக முடியாது.

**மாஸ்டர் தேவ்**

# பிச்சை எடுக்குதாம் பெருமான் அதைப் பறிக்குமாம் அனுமன்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் யுத்த வரி வசூல்

01. உழவு இயந்திரம் வருடம் ஒன்றிற்கு- ரூபா 25,000
02. மணல், கருங்கல், செங்கல் ஏற்றுகையில் ஒரு உழவு இயந்திரம் - ரூபா 200 ஒரு லொறிக்கு - ரூபா 500
03. விறகு ஏற்றிச் செல்லும் ஒரு சைக்கிளுக்கு- ரூபா 25
04. மாடு ஒன்று வைத்திருப்பதற்கு வருடத்திற்கு- ரூபா 5
05. ஆடு ஒன்று வைத்திருப்பதற்கு வருடத்திற்கு- ரூபா 5
06. நெல்வயலுக்கு ஓர் ஏக்கருக்கு ஒரு போகத்திற்கு ரூபா 500
07. ஒரு மூடை நெல்லுக்கு - ரூபா 10
08. தேனீர் கடை, மருந்துக்கடை, கார்ட்வெயார் கடை போன்ற ஒவ்வொன்றுக்கும்- ரூபா 25,000
09. மதுபான விற்பனை கடைகள் ஒவ்வொன்றுக்கும் மாத வரியாக- சாராயக் கடைக்கு - ரூபா 7,000, கள்ளு கடை - ரூபா 5,000
10. லொறி ஒன்று வைத்திருப்பதற்கு வருட வரி- ரூபா 25,000
11. ஒப்பந்தகாரர்களிடம் மணல் வேலைக்கு - 7 வீதம், கல் மற்றும் கொங்கிறீட் கல் வேலைகளுக்கு - 10 வீதம்.
12. முஸ்லீம்களின் காணியை புலிகள் எடுத்து குத்தகைக்கு விட்டால் ஒரு போகத்திற்கு ஒரு ஏக்கருக்கு- ரூபா 2,000.
13. மீன்பிடி தொழில் செய்வோருக்கு, இயந்திர படகுத் தொழிலுக்கு- வருடவரி -ரூபா 15,000, தோணி வைத்து தொழில் செய்வதற்கு மாதவரி- ரூ 400.
14. பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களில் இருந்து விற்பனையாகும் பொருட்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு கிலோவிற்கு - ரூபா 2.
15. கொடுக்கல் வாங்கல் கடன் தீர்ப்பதற்கு 7 வீதம் வரி.
16. புலிகளுக்கு உடன்பாடில்லாதவர்களின் வயல் காணியை புலிகள் குத்தகைக்கு விட்டால் ஒரு ஏக்கருக்கு ஒரு போகத்திற்கு- ரூபா 2,000
17. செல்வந்தர்களிடம் இருந்து வருட வரியாக ரூபா- 50,000 தொடக்கம் 100,000
18. கோயில்கள் மீதான வரியாக திருவிழா கால வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு.
19. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், வேறு சில பகுதிகளிலும் அரச உத்தியோகத்தர்கள் மீதான மாதவரியாக அவர்களின் சம்பளத்தில் 5 வீதம்.
20. வடக்கு-கிழக்கில் பொது வேலைகளுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் தொகையில் குறிப்பிட்ட தொகைக்கு வேலையை முடித்துவிட்டு மிகுதி தொகையை புலிகளுக்கு கொடுக்க வேண்டும். அது மொத்தத் தொகையில் 15 சதவீதத்துக்குக் குறையாததாக இருக்க வேண்டும்.
21. சில பகுதிகளில் சமுர்த்தி முத்திரை வழங்கும் போது அதற்கான உத்தியோகத்தர்கள் ஒரு குடும்பத்திற்கு ஒரு முத்திரை என வெட்டி புலிகளுக்கு வழங்க வேண்டும்.
22. புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருக்கும் அறுவை மரங்கள் புலிகளுக்கே உரிமையாம். மக்கள் தமது வீட்டுக்கு தேவையான மரங்களை புலிகளுக்கு விலை செலுத்தியே பெற்றுக் கொள்ள வேண்டும்.
23. சிறு வீடுகள், பெரிய வீடுகள் அமைப்பதற்கான மரங்களுக்கும் அவற்றின் பெறுமதிக்கான பணத்தை மக்கள் புலிகளிடம் செலுத்தியே பெற்றுக் கொள்ள வேண்டும்.
24. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் சென்று திரும்புவர்களிடம் இருந்து அறவிடப்படும் தொகை ரூபா 100,000 தொடக்கம் 500,000 வரை
25. புலிகளிடம் அனுமதிபெறாமல் அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் யாரும் வேலைகளில் ஈடுபட்டால் அது குற்றமாக கருதப்பட்டு குற்றப்பணம் அறவிடப்படும். வேலையைப் பொறுத்து குற்றத்தொகை வேறுபடும்.

**எமது மட்டக்களப்பு நிருபர்**

படிப்பகம்

www.padippakam.com





## எங்கள் சுதந்திரத்தைப் பறித்தவர்களின் அதிகாரத்தை உறுதி செய்ய ..........

எதற்காக இந்த ஊர்வலங்கள்?
எதற்காக இந்த கையெழுத்து சேர்ப்புகள்?
எதற்காக இந்த "பொங்கு தமிழ்" விழாக்கள்?
எங்கள் குறைந்தபட்ச ஜனநாயகத்தையே
வேட்டையாடியவர்கள் - எப்படி
ஜனநாயகத்தின் காவலர் ஆகினர்?

நில்லுங்கள்!
தொந்தரவுக்கு மன்னிக்கவும்!
உங்களைத்தானே தடை செய்தனர்
நீங்கள் அனைவரும்
துரோகிகளென அறிவிக்கப்பட்டு!
அவர்களைத் தடைசெய்வதை
நிறுத்தக்கோரி நீங்கள் தெருக்களில்......
உங்கள் மீது "அவர்" நடத்திய
மிருகத்தனங்கள் தவறானவையென
"அவர்" ஒத்துக்கொண்டதாக செய்திகளில்லை!
உங்கள் மீது "அவர்" செய்த தடையை நீக்க
நீங்கள் ஒன்று சேருங்கள் - உங்கள்
சுயநலங்கள்- மறைந்துபோன ஆயிரமாயிரம்
மனிதர்களின் தியாகங்களை கொச்சைபடுத்திவிட
அனுமதித்து விடாதீர் - அந்த மனிதர்களின்
மரணங்களிற்கு "அவர்" பதில் தரட்டும் - பின்
அனைவரும் சேர்ந்து "தடைசெய்யாதே!
தடைசெய்யாதே!
வன்னிக்காட்டில் ஞானம் பெற்ற இவர்களை
தடைசெய்யாதே!"
என்று கூக்குரலிடுவோம்!

ஈழ மாணவர்களே!
"பொங்கு தமிழ்" எழுச்சிக்கு
எனது பாராட்டுக்கள்.
எனினும் ஒரு நெருடல்.....
உங்களில் பலர் அறிந்திருக்க முடியாதுதான்.....
நீங்கள் - கள்ளன் - பொலிஸ்
விளையாடிக் கொண்டிருந்திருப்பீர்.
உங்கள் அம்மாவோ நிலாச்சோறு
ஊட்டிக்கொண்டிருந்திருப்பினம்......
அப்போதுதான் எங்கள் போராட்டம்
தன் நியாயத்தை அழித்துக் கொண்டது.....
எங்கள் வீதிகளில் உயிரோடு
எரிக்கப்பட்டோரின் கதை
உங்களுக்கு தெரிந்திருக்க
முடியாதுதான் - பூட்டிய வீட்டுக்குள்
செய்து முடிக்கப்பட்ட எங்களூர்
வெலிக்கடைக் கதை நீங்கள்
அறிந்திருக்க முடியாதுதான்.
சூரியன் மறையமுதல் - விரட்டப்பட்ட
ஆயிரக்கணக்கான மக்களின்
கதை உங்களுக்கு தெரிந்திருக்க
முடியாதுதான் - இன்னுமாயிரம்
கதைகள் உங்களுக்குத் தெரிந்திருக்க
நியாயம் இல்லைத்தான் - பூட்டிவிட்டு
தங்கள் கதைகளை மட்டும்
கேட்கத்தானே - உங்களை
"அவர்கள்" அனுமதித்தனர்.
"பொங்கு தமிழ்" விழா முடிந்தபின்
நேரம் கிடைத்தால் - அவைகளையும்
கொஞ்சம் அறிய முற்படுங்கள் - பரீட்சைக்குப்
படிப்பதை நிறுத்திவிடாதீர் - அடக்கு முறைக்கு
எதிரான உங்கள் எழுச்சி - வரவேற்கிறேன்.
உங்களைப் போன்று அடக்குமுறைக்கெதிராக
எழுச்சி கொண்டதால்தான் - நான்
என் தேசத்துக்கே அந்நியனாக்கப்பட்டேன்.
செல்வி, விஜிதரன், விமலேஸ்வரன்
உங்களைப் போன்று எழுச்சி கொண்டதால்தான்
அழிக்கப்பட்டனர் - இன்றைய பொழுதில்
இவர்களின் அழிப்பிற்குக்
காரணம் கேளுங்கள் "அவர்களிடம்"....
நம்புகிறேன் - நீங்கள் அனைத்து
அடக்கு முறைக்கும் எதிரானவர்களென்று -
சிலர் கூறுவதுபோல் - நீங்கள்
"அவர்களின் கைப்பொம்மைகள்"
இல்லையென்பதை...

*கனடாவுக்கு நாடு கடத்தப்பட்ட ஈழ மாணவன்*

# அரட்டை அரங்கம்

## சக்கடத்தாரும்-அம்மானும்

**இடம்:-** வீரகாளியம்மன் கோவிலடி. நேரம் - பின்னேரம் 5 மணி.

**சக்கடத்தார்:-** என்ன அம்மான் தேத்தண்ணி குடிச்சாச்சோ?

**அம்மான்:-** சீனியும் மாவுமில்லாமல் வெறும் ஓடல் வாடல் தண்ணிதான்.

**சக்கடத்தார்:-** ஏன்? மருமகளுக்கு இன்னமும் கனடாவில இருந்து உண்டியல் வரேலப் போலிருக்கு.

**அம்மான்:-** இந்த முறை கொஞ்சம் பிந்திப் போச்சு.

**சக்கடத்தார்:-** ஏன்? என்ன பிரச்சினை?

**அம்மான்:-** ஏதோ டொலரை மிதக்க விட்டிருக்காம். அதை எந்தக் கடல்ல மிதக்க விட்டிருக்கினம் எண்டுதான் தெரியல்ல. கடல் அலை ஏறி இறங்கிற மாதிரி கிடைக்கிற காசும் கூடிக் குறையுமாம்.

**சக்கடத்தார்:-** அப்ப எப்ப மாத்திறது?

**அம்மான்:-** தைப்பூசம் இந்தமுறை போயாவில தான் வருகுதாம். போயாயண்டு கடல் அலை ஏத்தம் கூடுமாம். அப்ப டொலர் கூட உயரத்தில மிதக்கேக்க மாத்தினா 420 ரூபா கூட வருமாம் எண்டு பொடிச்சி சொல்லுது.

**சக்கடத்தார்:-** அப்ப கனடாவில மகன் அமாவாசையில அனுப்ப இங்க மருமகள் பௌர்ணமியில மாத்துறா எண்டு சொல்லு.

**அம்மான்:-** என்ன கோதாரியோ ஒரு இழவும் விளங்கேல்ல.

**சக்கடத்தார்:-** அது சரி அது என்ன கனடாவில எல்லாம் தாலி அறுத்துப் போட்டு நிக்கினமாம்.

**அம்மான்:-** அது எங்கட பொடியள் ஆனையிறவைப் பிடிச்சதுக்கு கனடாவில சிலது காளி அம்மன் உரு ஆடி தங்கட கழுத்தில கிடந்த சைனைட் குப்பிகளை கழட்டி எறிஞ்சினமாம். அதைப் பாத்துக் கொண்டு நிண்டவையையும் எறியச் சொல்ல, அவையும் தங்கட கழுத்தில கிடக்கிறதுகள அறுத்து எறிஞ்சினமாம்.

**சக்கடத்தார்:-** அப்ப கொழும்பில இருக்கிற ஆனையிறவைப் பிடிச்சா என்னத்தை அறுத்து கொடுப்பினமோ தெரியேல.

**அம்மான்:-** கொழும்பிலயும் ஆனையிறவு இருக்கே?

**சக்கடத்தார்:-** ஓம், ஓம் - வெள்ளவத்தைக்கும் தெஹிவளைக்கும் இடையில இருக்கிற பாலம்தான்.

**அம்மான்:-** அது சரி எங்கட வெள்ளைக்காரன் நம்மட பொடியள ஏதோ பாண்(Ban) செய்யப் போறாங்களாம்.

**சக்கடத்தார்:-** பாண் செய்யிறாங்களோ அதோடசீனிச்சம்பலும் செய்யிறாங்களோ தெரியல்ல. ஆனா கை வச்சினமெண்டாத்தான் தெரியும் எங்கட பெடியள..

**அம்மான்:-** அது எப்படிச் செய்யிறது? பீத்தல் பறங்கி தன் புத்தியைக் காட்டிறான்.

**சக்கடத்தார்:-** ஏன் அம்மான்? வெள்ளைக்காரனுக்கு முந்தியே உங்கட பொடியள் பாண் செய்தவையள்தானே?

**அம்மான்:-** அதென்ன?

**சக்கடத்தார்:-** ஏன்? ஈழத் தமிழ் மண்ணில தங்களைத்தவிர, மற்ற தமிழ் சகோதரங்களின்ற இயக்கங்களை எல்லாம் பாண் செய்து ரொட்டி செய்து பார்சல் பண்ணினவைதானே? தங்களைப்போல திறமா போராடின சகோதரங்களை முச்சந்தியில வைச்சு சுட்டு லைட் போஸ்ட்ல கட்டினவைதானே?

**அம்மான்:-** அது சரி அண்ணை, வெள்ளைக்காரன் பாண் செய்தால் உவையளுக்கு என்ன நடக்கும்?

**சக்கடத்தார்:-** இப்பவே மூண்டு மாசம் பிள்ளைப் பேறு லீவு மாதிரி கேட்டிருக்கினம். துணுக்காய், மல்லாவி புளியமரங்களைத்தான் சுத்தி வருயினம். வாறவன் போறவன் எல்லாரையும் கூப்பிட்டு கதைக்கச் சொல்லி கெஞ்சினம். 1948 இல நாங்கள் எல்லாருமாச் சேர்ந்து வெள்ளைக்காரனை அனுப்பினாங்க, இப்ப அவங்கள் நாங்கள் எல்லாம் ஒண்டாச் சேர்ந்து நிம்மதியா இருக்கட்டுமெண்டு இவையள அங்கயிருந்து அனுப்பப் போறாங்களாம்.

**அம்மான்:-** அப்ப பாலசிங்கம் பாடு?

**சககடததாா:-** தருமபவும துணுக்காய் பங்கர்தான்.

**அம்மான்:-** அது சரி சக்கடத்தார் சமாதானம் வருமோ?

**சக்கடத்தார்:-** ஓ எங்கட பழைய சீர்காழி பாடின மாதிரி, எங்கட தலைமுறை போயிட்டுது. இந்த தலைமுறையில குடும்பங்கள் எல்லாம் சிதறிப்போய் கிடக்குது. அடுத்த தலைமுறை நூல் அறுந்த பட்டம் மாதிரி விலாசம் இல்லாமல்தான் போகுமோ தெரியல்ல.

**அம்மான்:-** எங்களுக்கும் நல்ல காலம் வருமே.

**சக்கடத்தார்:-** எது வரும் எப்ப வரும் எண்டு தெரியால்ல. ஆனா எல்லாம் அழிஞ்சு போறது மட்டும் தெரியிது.

*தேவன்*

## இரங்கல்



**மனோராணி சரவணமுத்து**

மனித உரிமைகளுக்கும், ஜனநாயகத்திற்கும் குரல் கொடுத்ததற்காக ஐ.தே.க பயங்கரவாதத்தின் இருண்ட நாட்களில் படுகொலை செய்யப்பட்ட ரிச்சார்ட் டி சொய்சா அவர்களின் தாயார் மனோராணி சரவணமுத்து அவர்களின் மறைவுக்கு கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

மனோராணி சரவணமுத்து அவர்கள் இருண்ட நாட்களின் பயத்திலிருந்து விடுபடுவதற்கான இயக்கத்தில் அன்னையர் முன்னணியிலும் முக்கிய பங்காளியாக இருந்தார்.

## உங்களை நம்புகிறோம்

நாள்கள் செதுக்கிப்
பார்த்தோம்
இதுவரைக்கும் முடியவில்லை

எம்மை எல்லாம்
ஆட்டு மந்தையாகவே
இன்னமும் எண்ணும்
அந்த கொழுத்த
மலைகளை தகர்க்கவும்

உங்களால் முடியுடிமென்று
நம்பிக்கையோடு
எதிர்பார்க்கின்றோம்!

நன்றி:- மாடும் வீடும்

www.padippakam.com



# லண்டன் கடிதம்

## அன்பு வாசகர்களுக்கு

கண்ணோட்டத்தின் உள்ளடக்கத்தையும், தரத்தையும் மேன்மேலும் செழுமைப்படுத்த பலதரப்பட்ட செய்திகளையும் ஆக்கங்களையும் பெற்று பிரசுரிப்பதில் ஆசிரியர் குழு அக்கறையுடன் செயற்பட்டுவருகின்றமை பாராட்டக்குரியது.

பத்திரிகையின் தரம் என்பது பலதரப்பட்ட தகவல்களைச் சரியாக வாசகர்களுக்கு கொடுப்பதிலும் ஆய்வாளர்களின் கருத்துக்களை கருத்துக்களுக்காகவே கொடுப்பதிலுமே தங்கியுள்ளது.

தாம் பெறும் கருத்துக்களையும் தகவல்களையும் வைத்து வாசகர்கள் நாட்டு நடப்பின் சமூக அரசியற் போக்குகளை புரிந்து கொள்வதற்கான ஒரு சாதனமாகவே பத்திரிகைகள் இருத்தல் வேண்டும். அதுவே உயிர்துடிப்புள்ள பத்திரிகையின் இன்றியமையாத அம்சமாகும்.

இந்த வகையில் இந்த லண்டன் கடிதத்தின் நோக்கம், இங்குள்ள நாட்டு நடப்புக்களை, புதினங்களை, சுவையான தகவல்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதே. இயன்றவரையில் கருத்துக்களைக் குறைத்துத் தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான முயற்சியே இது.

சிறீலங்கா விவகாரங்களையும் தமிழ் மக்களின் நிலையையும் பொறுத்த வரையில் வெளிநாட்டில் நடைபெறும் காரியங்கள் பற்றி அறியும் ஆவல் நிறையவே இருக்கும் என்ற அனுமானத்தின் அடிப்படையிலேயே இக்கடிதம் எழுதுகிறேன். இது பற்றிய உங்கள் கருத்துக்களை வாசகர் கடிதப் பகுதியினூடாக அறியத்தருவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

இக் கடிதத்தில் பிரித்தானிய பாராளுமன்றத்தில் பெப்ரவரி மாதம் 19ம் திகதி நிறைவேற்றப்படவிருக்கும் பயங்கரவாத இயக்கத் தடுப்புச் சட்டம் பற்றியும், அது தொடர்பாக இங்கு நடைபெறும் விடயங்கள் பற்றியும் சில குறிப்புக்களைத் தருகிறேன்.

இந்தச் சட்டத்தின் முக்கிய அம்சமாகக் கருதப்படுவது, பிரித்தானியாவுக்கு வெளியிலும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதற்காக பிரித்தானிய அரசு கருதும் இயக்கங்களை அதன் நடவடிக்கைகளை பிரித்தானியாவில் தடை செய்வதேயாகும். நிறைவேற்றப்படவிருக்கும் இச் சட்டத்தின் பிரகாரம் புலிகள் இயக்கத்தின் பிரித்தானிய நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாகத் தடை செய்யப்படலாம் என்ற பரவலான கருத்து நிலவுகின்றது.

மாறாக புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட இயக்கமாக நிரல்படுத்தப்படாமல் பிரித்தானிய அரசு ஒரு நெகிழ்ச்சிப் போக்கைக் கடைபிடிப்பதன் மூலம் தொடர்ச்சியான கண்காணிப்பையும் அழுத்தத்தையும் புலிகள் மீது ஏற்படுத்தும் நிலையை பேணவே விரும்பும் என்கின்ற பலமான கருத்தும் நிலவி வருகின்றது.

பெப்ரவரி 19ல் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டாலும் தடை செய்யபட்ட இயக்கமாக ஓர் இயக்கத்தைப் பிரகடனப்படுத்துவது எப்போது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு உள்துறை அமைச்சைப் பொறுத்ததே. அதாவது பிரித்தானிய அரசின் முடிவைப் பொறுத்ததே. எது எப்படியிருப்பினும் அது தொடர்பான நடவடிக்கைகளை பற்றிப் பார்ப்போம்.

கடந்த வருட இறுதியில் இலண்டனில் நடைபெற்ற மாவீரர் தின உரையில் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான திரு.பாலசிங்கம், மேற்கத்தைய அரசுகள் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதால் பெரிய அளவில் பாதிப்பெதையும் ஏற்படுத்தப் போவதில்லை என்றும், அமெரிக்க அரசினால் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டதன் பின்னர் அங்கு வாழும் தமிழர்கள் ரோசத்துடன் அதிகமாகப் பணம் கொடுக்கத் தொடங்கியுள்ளார்கள் என்றும், தடைகளை மீறி குறுக்கு வழிகளில் இயங்குவது ஒன்றும் பெரிய விடயமல்ல என்ற பொருள்படவும் பேசினார்.

ஜனவரி 22ம் திகதி புலிகளின் முன்னணி அமைப்பொன்றினால் பிரித்தானிய பாராளுமன்றக் கட்டிடத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டமொன்றில் எட்டுப் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் முன்னைநாள் யாழ் ஆயர் வணக்கத்துக்குரிய இம்மானுவேல் உட்பட பல புலி இயக்க ஆதரவாளர்களும் பங்குபற்றினார்கள். இக்கூட்டத்தின் தொனி புலிகள் இயக்கம் தடைசெய்யப்படக் கூடாது என்ற கோரிக்கைக்கு ஆதரவு திரட்டுவதாகவே இருந்தது.

நூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட பிரித்தானியப் பாராளுமன்றத்தில் எட்டு உறுப்பினர்கள் குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தை ஏற்படுத்த முடியாது என்றாலும் தடை ஏற்படக்கூடாது என்பதில் புலிகள் அக்கறையாக உள்ளனர் என்பது வெளிப்படை.

இங்கு கவனத்திலெடுக்க வேண்டிய விடயமென்னவெனில் வெளிநாட்டில் இயங்கும் பயங்கரவாத இயக்கமொன்றை பிரித்தானியாவில் தடை செய்ய பிரித்தானிய அரசு சட்டமொன்றை நிறைவேற்றியுள்ளது. புலிகளும் இலங்கை அரசும் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இச்சட்டம் நடைமுறைக்கு வருவது மட்டுமே இப்போதைக்கு உண்மை. இச்சட்ட மூலம் புலிகள் இயக்கம் பற்றி எதையும் நேரடியாகக் கொண்டதல்ல.

ஆனால் இலங்கை அரசு இச்சட்டத்தின் பிரகாரம் புலிகள் இயக்கமும் பயங்கரவாத இயக்கமாக நிரல்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் அழுத்தத்தையும் கொடுத்து வருகின்றது. இதற்கு ஆதாரமாக புலிகளின் நடவடிக்கைகள் பயங்கரவாதமே என இலங்கை அரசு வாதிடுகின்றது.

புலிகள் தரப்பிலிருந்தோ அன்றில் புலிகள் ஆதரவுக் கட்சிகள் தரப்பிலிருந்தோ புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடவில்லை என்றோ அல்லது இனிமேலாவது பயங்கரவாதம் எனக் கருதப்படும் நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடமாட்டார்கள் என்றோ விளக்கவில்லை.

புலிகள் இயக்கத்தைத் தடை செய்யக் கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து அழுத்தத்தைக் கொடுப்பதாக இலங்கையிலுள்ள தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பல்கலைகழக மாணவர் அமைப்புக்கள் பிரித்தானிய அரசுக்கு தொடர்பற்ற விடயங்களைக் கூறி விண்ணப்பங்களைக் கொடுப்பது அர்த்தமற்ற விடயமாகவே தோன்றுகிறது. மாறாக இவர்கள் புலிகள் இயக்கம் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடாது எனவே புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாக நிரல்படுத்தப்படுவது நியாயமற்றது என்று, வாதிடுவதே அர்த்தமுள்ளதாக இருக்கும்.

யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, சுயநிர்ணய உரிமை அங்கீகாரம் என்பன முற்றிலும் வேறான விடயங்கள் அதற்கான மக்கள் ஆதரவை அணிதிரட்டுவதென்பது- சர்வதேச ஆதரவைப் பெறுவது என்பது சிக்கல் நிறைந்த அரசியல் விவகாரமாகும். பிரித்தானியாவின் பயங்கரவாதத் தடை சட்டத்தோடு எமது மக்களின் அரசியற் போராட்டத்தைப் போட்டுக் குழப்பியடிக்கக் கூடாது.

பெப்ரவரி மாதம் 19ம் திகதி முடிவடைந்துவிட்டது. இப்போது பிரித்தானியாவின் வெளிநாடுகளில் செயற்படும் இயக்கங்கள் தொடர்பான பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது. எந்தவேளையிலும் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத இயக்கம் என நிரல்படுத்தப்படக்கூடும். அது எப்போது நடைபெறும் இப்போது கூறமுடியாது.

எப்படிப்பார்த்தாலும் தற்கொலைக் குண்டு தாக்குதல்கள், அரசியற் படுகொலைகள், படுகொலை செய்துவிட்டு துரோகிகள் எனக் குற்றஞ் சாட்டுதல், பொது மக்களைக் கொல்லுதல், பொது இடங்களில் குண்டுவெடிப்புகளை நிகழ்த்துதல் போன்ற நடவடிக்கைகள் அனைத்தும் பயங்கரவாதம் என வரையறுக்கப்படுகின்றன. அவ்வாறான செயல்களில் ஈடுபடும் இயக்கங்கள் பிரித்தானியாவிலும் பிரித்தானியாவுக்கு வெளியிலும் செயலகங்கள் வைத்து செயற்படும் நிலையில் இருந்து மாற்றம் ஏற்படும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

சுருங்கக்கூறின் புலிகள் இயக்கம் பிரித்தானியாவில் தடைசெய்யகூடாது என உணர்வுபூர்வமாகக் கருதுபவர்கள் புலிகள் மேற்கூறிய பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்ற அழுத்தத்தை புலிகளுக்கும் ஏற்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும் புலிகளைத் தடைசெய்ய கூடாது என பிரித்தானிய அரச பிரதிநிதிகளைக் கோருபவர்களும், பிரிட்டிஷ் பிரதமருக்கு கடிதம் எழுதும் அரசியல்வாதிகளும் உண்மையாகவே அவ்வாறு தடைசெய்யக் கூடாது என்று உணர்வுபூர்வமாகக் கோருகிறார்களா என்பதைக் காலம்தான் வெளிப்படுத்தும்.

**மீண்டும் மறு கடிதத்தில் அன்புடன்**
**லண்டனிலிருந்து தம்பர்**

---

# சோக்கிரட்டீஸ் பதில்கள்

எஸ் சிவசண்முகம், யாழ்ப்பாணம்

**பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுக்கு வழங்கப்பட்ட திரு. வி.க விருதைப்பற்றிக் கூறுங்கள்?**

முன்னாள் கலாச்சார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியிடமும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடமும், கலைஞர் மு.க. விடமும் எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக விருது வாங்கும் திறமை சிவத்தம்பி அவர்களுக்கு உண்டு.



ஏ. நாகரத்தினம்– ஆரயம்பதி

**சந்தனக்கடத்தல் வீரப்பன் கைது செய்யப்பட்டால் ஈழத்தில் என்ன நடக்கும்?**

ஒரு விடுதலைப் போராளி கைது செய்யப்பட்டதாக ஆர்பாட்டங்களும், கண்டனப் பேரணிகளும் நடந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

என். அல்பிரட்– மட்டக்களப்பு.

**புலிகளால் மேற்கொள்ளப்பட்ட, இன்னமும் மேற்கொண்டு வருகிற அரசியல் படுகொலைகள், ஏனைய தமிழர் இயக்கங்களை தடை செய்து வைத்திருக்கின்றமை, மக்கள் விரோதச் செயல்கள் போன்றவை தொடர்பாக மதத் தலைவர்களும் தமது எதிர்ப்புக்களை தெரிவிக்காது மௌனமாகவும், மறைமுக ஆதரவாகவும் இருந்து வருவது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

கலிலியோவை துன்புறுத்தியதற்காக கத்தோலிக்கத் திருச்சபை 500 ஆண்டுகளுக்குப் பின்னர் உலக மக்களிடம் மன்னிப்பு கேட்டது. ஹிட்லரின் காலத்தில் மௌனமாக இருந்ததற்காக திருச்சபை 50 ஆண்டுகளுக்குப் பின்னர் ஐரோப்பிய மக்களிடம் மன்னிப்புக் கேட்டது. இப்போது புலிகளின் கொடூரங்களுக்கும், அநியாயங்களுக்கும் ஆதரவாக இருக்கின்றமைக்காக வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள திருச்சபையினர் எப்போது இலங்கை மக்களிடம் மன்னிப்பு கேட்கப் போகிறார்கள்?

கே. வன்னியசிங்கம் – யாழ்ப்பாணம்.

**காலஞ்சென்ற அ. அமிர்தலிங்கம் அவர்களுக்குப் பின்னர் தமிழர்களுக்கு பிரதிநிதி யார்?**

அட மகேஸ்வரா அதை ஏன் கேக்கிறியள்.

ஆர். குகநாதன் – வெள்ளவத்தை.

**தென்மராட்சியில் மக்கள் மீண்டும் குடியேறக்கூடாதென புலிகள் கூறுவதன் அர்த்தம் என்ன?**

அக்திகள் என்ற பெயரில் வலிகாமத்திலிருந்து பிச்சை எடுப்பதா?

எம். ஈஸ்வரி – வவுனியா.

**பிரிட்டன் புலிகளை தடை செய்ய வேண்டும், தடை செய்ய கூடாது என்று நடந்த சொற்போர் சப்பென்று போய்விட்டதே?**

யார் சொன்னது அவ்வாறு. இப்போது சவுக்கு பிரிட்டனின் கையில்.



நா. கந்தசாமி – காரைதீவு.

**பிரிட்டன் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டுமென சில தமிழ் கட்சிகள் வரிந்து கட்டி நிற்கின்றனவே?**

அதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும் புலிகளால் இவர்கள் மீது விதிக்கப்பட்ட தடையை யார் நீக்குவது?

ஆர். ராஜேஸ்வரி – உவர்மலை.

**பேச்சுவார்த்தைக்கு முன்னான புரிந்துணர்வு நிலைக்கு அடிப்படையாக வடக்கு கிழக்குத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் பயங்கரவாத நட வடிக்கைகளை நிறுத்த வேண்டுமென அரசு நோர்வேயினுடாக கோரிக்கை விடுத்துள்ளதுதே?**

வடக்கு கிழக்கு நாட்டின் பகுதி இல்லை என்றா கருதுகிறார்கள்? இல்லையேல் அவையும் பட்டதுபாடு அது நடந்தால் நமக்கு நன்மைதான் என்று யோசிக்கிறார்கள் என்னவோ.



ஏ. இராமசாமி – நுவரெலியா

**ஐ.தே.க கண்டியிலிரு ந்து நடத்திய ஊர்வலத்தில் ஜனாதிபதியை சித்தரிக்கும் விதத்தில் கண் ஊனமுற்ற ஒரு பெண் ஒருவரை காட்சிப் பொருளாக்கியதே?**

இது ஐ.தே.க வின் ஊனத்தைக் காட்டுகிறது மாத்திரமல்லாமல் அது எத்தகைய வக்கிரமான கட்சி என்பதையும் காட்டுகின்றது. தலைமுறை தலைமுறையாக வந்த மானிட விழுமியங்களை ஊனமுற்றவர்கள் கடவுளின் குழந்தைகள் என்ற உயரிய பண்பை சிதைக்கிறது.

மா. தனஞ்ஜெயன் – பதுளை.

**குஜராத்தின் பூகம்பம் கல்லையும் உருக்கும் ஆனால் இங்கு அதிர்ச்சியலைகள் பெரிதாக இல்லையே?**

சுரணைகெட்ட சுயபத்தாசாபம் கொண்ட சமூகமாக இலங்கையர் சமூகம் மாறி விட்டதா என்று ஐயுறவேண்டியிருக்கிறது. குஜராத்தில் மடிந்த மக்கள் தொகை கடந்த 20வருட யுத்தத்தில் மடிந்ததைவிட இரு மடங்கு.

கே. சந்திரசேகரம் – மன்னார்.

**புலிகளுடன் சிஹல உறுமயவையும் தடை செய்யுமாறு ஜே.வி.பி கோரியிருக்கிறது பற்றிய உங்கள் கருத்து என்ன ?.**

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அதனை பொதுவில் வைப்போம்" என்ற பாரதியின் வரிகள்தான் ஞாபகத்துக்கு வருகின்றது.

எல். அபிராமி – வவுனியா.

**இஸ்ரேலின் புதிய பிரதமராக எரியல் சரூன் தெரிவு செய்யப்பட்டது பற்றி?**

மத்திய கிழக்கில் சமாதான நம்பிக்கைகள் அருகிவருகின்றன. அகதி முகாம்களில் படுகொலை செய்தவர்களால் எப்படி சமாதானத்தைக் கொண்டுவரமுடியும்.



என்– அரவிந்தன் – யாழ்ப்பாணம்.

**வடக்கு கிழக்கு பல்கலைகழகங்களில் பொங்கு தமிழ் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றனவே?**

அரசியல் அபிலாஷைகள் மறுக்கப்பட்டு ஜனநாயக விரோதப் படுகொலைகள் மலிந்த வெறும் பானையாகவல்லவா தமிழர் வாழ்வு இருக்கிறது. தமிழ் மக்களின் அக வாழ்வில் மானிடத்தன்மை என்ற அரிசி இடப்பட்டால்தான் உண்மையான பொங்கல் சாப்பிட முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் நாடு தேர்தல்களம் யார் பெறுவார் அந்த அரியாசனம்?

தமிழ்நாடு மாநில தேர்தல் எதிர்வரும் வைகாசி மாதத்தில் நடைபெறவுள்ளது. 225 சட்டசபை தேர்தல் தொகுதிகளில் போட்டியிடும் பெரிய கட்சிகள் எல்லாம் இம்முறை பலத்த தேர்தற் கூட்டணி அமைத்தே மோதவிருக்கின்றன.

முதலாவது அணியில் தி.மு.க, ம.தி.மு.க, பா.ஜ.க, போன்ற பெரிய கட்சிகளுடன், எம்.ஜி.ஆர், அணி (ஆர்.எம்.வீரப்பன்), எம்.ஜி.ஆர் கட்சி (திருநாவுக்கரசு), முஸ்லீம் லீக்(லத்தீப் பிரிவு) என இணைந்துள்ளன. இக்கட்சிகளுடன் வாழப்பாடியாரின் ராஜீவ் காங்கிரஸ் கட்சியும் இணைந்து கொள்கிறது.

மற்ற அணியில் அ.தி.மு.க, பா.ம.க, ஆகியவற்றுடன் இடது, வலது கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகியவையும் இணைகின்றன. இதற்கிடையில் மூப்பனாரின் த.மா.கா, இந்திரா காங்கிரஸ் ஆகியவை மூன்றாவது அணியை



அடல்பிகாரி வாஜ்பே

வேறு சில சிறிய கட்சிகளான புதிய நீதிக்கட்சி, கண்ணப்பனின் கட்சி போன்றவற்றுடன் சேர்ந்து அமைக்குமா அல்லது ஜெயலலிதா அணியுடன் இணையுமா என்பது இன்னமும் இறுதியாகவில்லை.

## கருணாநிதியே பலம்

தி.மு.க தலைமை தாங்கும் தேசிய முன்னணியில் தி.மு.க, ம.தி.மு.க, பா.ஜ.க, ஆகியவையே பிரதான கட்சிகளாகும். நான்கு தடவைகள் முதலமைச்சராக இருந்த திரு.மு. கருணாநிதியே இக் கூட்டணிக்குத் தலைமை தாங்குகிறார்.

77வயதான கருணாநிதி கடுமையாக நோய்வாய்ப்பட்ட நிலையில் அவரால் திறமையாக தேர்தல் பிரச்சாரத்தில் பங்கு கொள்ள முடியுமா என்பது சந்தேகமே. அவரது அனுபவமும் சாணக்கியமும், பேச்சுத்திறமையும் உள்ளவர்கள் வேறு யாரும் தி.மு.க விலோ அல்லது அதன் கூட்டணியிலுள்ள சக கட்சிகளிலோ இல்லை. வை. கோபாலசாமியை எந்தளவு தூரம் தி.மு.க ஏற்றுக் கொள்ளும் என்பது சந்தேகமே. கருணாநிதியின் மகன் ஸ்டாலின் சமாளிக்கக் கூடியவரல்ல.

ஆயினும் இக்கூட்ணிக்கு கருணாநிதி, வை.கோ, இவர்களுடன் பா.ஜ.கவின் மத்திய தலைவர்களும் தமிழக மக்கள் மத்தியில் தோன்றுகையில் இது ஒரு வலிமைமிக்க கூட்டணியாகவே பார்க்கப்படும்.

அத்துடன் பா.ஜ.க. மத்திய அரசுப் பலத்தையும், தி.மு.க. மாநில அரசு பலத்தையும் கொண்டவை என்பன அவர்களுக்குப் பெரும் வாய்ப்பைக் கொடுக்கின்றன.

## வாஜ்பாயே துணை

மேலும் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இதுவரை எந்த வகையிலும் கெட்ட பெயர் எடுக்காதது மட்டுமல்ல, தேசிய பாதுகாப்பு விடயங்களிலும், வெளிநாட்டு விவகாரங்களிலும் குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் இலங்கை விவகாரங்களில் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வந்திருக்கின்றமையும் அவரைப்பற்றிய அபிப்பிராயத்தை தமிழக மக்கள் மத்தியில் மிகவும் உயர்த்தியே வைத்திருக்கின்றன.

அத்துடன் 1996 முதல் இன்றுவரை தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள தொழில்துறை வளர்ச்சிகளும் கருணாநிதியின் தலைமைக்கு வலிமை சேர்ப்பனவாகவே உள்ளன.

அத்துடன் தி.மு.க, பா.ஜ.க. ம.தி.மு.க, வின் கட்டுக் கோப்பான கட்சி அமைப்புக்களும், தொண்டர் அமைப்புக்களும் அவர்களுக்குப் பலமாகவே உள்ளன. ஆர்.எஸ்.எஸ். மற்றும் விஷ்வ ஹிந்து பரிஷத் போன்ற இந்து தீவிர அமைப்புக்களின் ஆதரவும் பா.ஜ.க.வுக்கு உள்ளன.

ஆதலால் பிராமண வாக்குகளும், செல்வாக்குகளும் தி.மு.க. அணிக்குச் சார்பாகவே கூடுதலாகச் செயற்படும். மேலும் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் சினிமாத்துறையினரும், பத்திரிகைத் துறையினரும் தி.மு.க. அணிக்கு ஆதரவாகவே உள்ளனர்.

## தடைகளைத் தாண்டி வரும் ஜெயலலிதா

ஜெயலலிதா தலைமையில் உருவாகிவரும் கூட்டணியே தி.மு.க.வுக்கு மாற்றான வலிமையான கூட்டணியாகும். 1991ம் ஆண்டு தொடக்கம் 1996ம் அண்டு வரை ஆட்சி பீடத்தில் இருந்த ஜெயலலிதா விட்ட தவறுகளையெல்லாம் தவற விடாமல் பிடித்துக் கொண்டு ஆட்சிக்கு வந்த கருணாநிதி அவர்கள் ஜெயலலிதா மீண்டும் தலையெடுக்க விடாமல் செய்வதற்கான எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

ஜெயலலிதா வாழ்நாள் பூராவும் நீதிமன்றங்களுக்கும் சிறைக்குமெனச் செல்ல வைக்கும் வகையாக எல்லா முயற்சிகளையம் மேற்கொண்டார்.



ஜி.கே. மூப்பனார்

ஆனால் எதற்கும் சளைக்காத ஜெயலலிதா ஒவ்வொரு தடைகளாகத் தாண்டி வந்துகொண்டிருக்கிறார். 1996ம் ஆண்டு தேர்தலில் அவர் தோற்ற போது இருந்த நிலைமைக்கும் இன்றைக்குமிடையில் எவ்வளவோ பெரிய வித்தியாசம் உள்ளது.

1996ம் ஆண்டு அ.தி.மு.க. அழிந்து போகுமோ என்ற ஐயம் எழும் நிலை இருந்தது. ஆனால் இப்போது அவரது விஸ்வரூபம் தொடர்ந்து உயர்ந்து வருகிறதென்றே கூறுதல் வேண்டும். அவருடன் இரண்டு காங்கிரஸுகளும் சேர்ந்து கொள்ளுமாயின் தி.மு.க. அணியின் நிலை பெரும் சங்கடத்துக்கு உள்ளாகும். இதைக் கருணாநிதி மிகத் தெளிவாகப் புரிந்து வைத்திருப்பதனாலேயே மூப்பனாருக்குத் தொடர்ந்து வலைவிரித்தபடி செயற்பட்டு வருகிறார்.

அதேவேளை சோனியா காந்தி அவர்கள் ஜெயலலிதாவுடனான கூட்டணியையே விரும்புகிறார். சோனியா காந்தியின் பாராளுமன்ற இலக்குக்கும், ஜெயலலிதாவின் சட்டசபை இலக்குக்கும் இடையிலான ஒரு சமன்பாட்டை அவர்கள் வகுத்துக் கொண்டால்தான் அவர்களிடையே கூட்டணி சாத்தியமாகும்.

அத்துடன் மாநிலத்தில் கூட்டணி ஆட்சி இல்லை என்ற நிலைப்பாட்டை



சோனியா காந்தி

ஜெயலலிதாவும் மாற்றிக் கொள்வது தவிர்க்க முடியாததாகும்.

ஜெயலலிதா அவர்கள் காங்கிரஸுகளுடன் கூட்டணி வராத இந்த வேளையில் கூட தன்னுடன் உள்ள மற்ற கட்சிகளுடன் பல பிரச்சினைகளைத் தீர்க்காமல் இருக்கிறார்.

1. கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடனான தேர்தலுக்குப் பிந்திய உறவு நிலை.

2. கட்சிகள் பங்கு போடத்துடிக்கும் இடங்களின் எண்ணிக்கை. காங்கிரஸுகள் இரண்டுமோ அல்லது அவற்றில் ஒன்றோ உள்ளே வந்து விட்டால் தமது முக்கியத்துவம் போய் விடும் என்று கருதுகிற சிறிய கட்சிகள் இப்போதே பங்குப் பிரச்சினைகளைப் பேசி முடித்து விடவேண்டுமெனத் துடிக்கின்றமை.

## ஜெயலலிதாவின் வெற்றிக்கு முரசொலிமாறன்

ஜெயலலிதா அணி பற்றிய இறுதித் தோற்றம் அடையாளம் காணப்பட இன்னமும் காலம் உண்டு. ஜெயலலிதாவின் பல கோடி ரூபாக்கணக்கான ஊழல் மோசடிகளை மக்கள் எவ்வளவு தூரம் மறந்திருப்பார்கள் என்பது இன்னமும் கேள்விக் குறியாகவே உள்ளது.

அத்துடன் ஜெயலலிதா மீண்டும் சசிகலாவுடன் வலம் வருவதை எம்.ஜி.ஆரின் தொண்டர்கள் எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்ளப்போகின்றார்கள் என்பதுடன், பொதுமக்களும் சசிகலாவின் தோற்றத்தை எவ்வாறு சகித்துக் கொள்ளப் போகின்றார்கள் என்பதெல்லாம் கேள்விக் குறிகளே.

ஜெயலலிதாவின் ஊழல் இப்போது மக்கள் மத்தியில் ஒரு பெரிய பிரச்சினையல்ல என்றும், ஜெயலலிதாவைப் போல பத்து மடங்கு ஜெயலலிதாவை விழுங்கிச் சாப்பிடும் அளவுக்கு கருணாநிதியின் மருமகனும் மத்திய அமைச்சருமான முரசொலி மாறன் ஊழல் மோசடிகள் செய்திருக்கிறார் என்றும், தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான சீமெந்துத் தொழிற்சாலைகளை அவர் தமது சொத்துக்களாக வளைத்துப் போட்டுள்ளார் என்றும், தமிழ்நாட்டில் அண்மைக் காலங்களில் வெளிநாட்டுக் கம்பனிகளுடன் கூட்டமைத்துத் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் பெரும்பங்குதாரர்களாக மத்திய தொழில் அமைச்சரான முரசொலிமாறன் குடும்பத்தவர்களே ஆக்கப்பட்டுள்ளனர் எனவும், இந்த ஊழல்களே இப்போது மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று வருவதனால் ஜெயலலிதாவின் ஊழல்கள் பின்னணிக்குப் போய்விட்டன எனவும் தமிழக அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

எனவே எதிர்வரும் தேர்தலில் ஜெயலலிதாவின் பலத்தைவிட கலைஞருக்கு முரசொலி மாறன் என்னும் பலவீனம் ஒரு பெரும் நெருக்கடியாக இருக்கும் எனக்கருதப்படுகிறது.

## வடலி வளர்த்துக் கள்ளுக் குடிக்கும் முயற்சியில் மூப்பனார்

மேற்கூறிய இரண்டு கூட்டணிகளில் ஒன்றே ஆட்சி அமைக்கக் கூடிய வாய்ப்பைக் கொண்டிருக்கின்றன. ஆயினும் மூப்பனாரின் த.மா.கா., தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் ஆகியவற்றிற்கிடையே தனியாக ஒரு மூன்றாவது கூட்டணியை அமைக்கும் யோசனைகளும் உள்ளன.

இரண்டு காங்கிரஸுகளும் இணைய வேண்டுமென்ற ஆவல் இரு பக்கமும் இருப்பினும், மூப்பனார் காங்கிரஸை விட தமிழ்நாடு சோனியா காங்கிரஸ் காரர்கள் ஜெயலலிதாவுடனான கூட்டணியையே பெரிதும் விரும்புகின்றனர்.

1989ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஒன்றாயிருந்த காங்கிரஸ் தனியாகப் போட்டியிட்டபோது படுதோல்

தமா-தேவ்

வியைக் கண்டதெனினும் மூப்பனாருக்கு முதலமைச்சராகும் ஆசை இன்னமும் போகவில்லை. த.மா.க. கடந்த தேர்தலில் தனியாகப் போட்டியிட்டதனால் பெரும்பாலான இடங்களில் கட்டுக்காசைக் கூடப் பெறமுடியாமற் போனது.

த.மா.கா.வில் மூப்பனாரே தனிப் பெரும் தலைவர். அவரை மறுத்துப் பேசும் தன்மையில் அங்கு யாரும் இல்லை. சிதம்பரம் போன்றவர்கள் யதார்த்தைப் புரிபவர்களாக இருப்பி



ஜெ. ஜெயலலிதா

னும் எதுவும் செய்ய முடியாதவர்களாகவே உள்ளனர்.

மூப்பனார் சோனியா காந்தியின் விசுவாசியே. எனினும் ஜெயலலிதாவையும் உள்ளடக்கி ஆளுகின்ற தமிழ்நாட்டுத் தலைவராக தான் ஆக வேண்டும் என்ற அவரது ஆசையே இங்கு பிரச்சினையாகும். இதில் மாற்றமேற்பட்டால் ஜெயலலிதா ஆட்சி உத்தரவாதமாகும்.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்களுக்கு மட்டுமல்ல, அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் சோனியா காந்திக்கும் வாய்ப்புக்கள் பெருகும். இந்திரா காங்கிரஸ் தேசிய ரீதியில் தனது செல்வாக்கை மீள வளர்ப்பதற்கு தமிழ்நாட்டில் அதன் வளர்ச்சி அவசியமாகும்.

எனவே அதையொட்டியே சோனியா காங்கிரஸ் செயற்படும் என்பதே அதன் யதார்த்தமாகும். காங்கிரஸ் தனக்குள்ளே உள்ள பூசல்களைக் கடந்து தேர்தலுக்குத் தயாராக முயற்சித்துக் கொண்டிருக்கின்றது.

தமிழ் நாட்டில் தி.மு.க. அ.தி.மு.க ஆகிய ஒவ்வொன்றும் தனித்தனியாக சுமார் 25வீத வாக்குப் பலத்தையே கொண்டிருக்கின்றன. காங்கிரஸ் இரண்டும் ஒன்றாக இருந்தால் தனித்துவமாக சுமார் 15சதவீத வாக்குப் பலத்தையும், அவையிரண்டும் தனித்தனியாகப் போட்டியிட்டால் மொத்தத்தில் 10சதவீத வாக்குகளை மட்டுமே பெறக் கூடியவையாகவும் உள்ளன.



மு. கருணாநிதி

எவ்வாறாயினும் மிகுதி 35சதவீத வாக்குகளும் மிதக்கும் வாக்குகளாகவே உள்ளன. இதில் ஒரு பகுதியைக் கைப்பற்றவே வன்னியர்கள், முக்குலத்தோர், தாழ்த்தப்பட்டோர், உயர்த்தப்பட்டோர் என சாதிக் கட்சிகள் செயற்படுகின்றன.

இதனாலேயே தமிழகத் தேர்தல்களில் சாதிக் கட்சிகளுடனான கூட்டணிகள் முக்கியம் பெறுகின்றன. தேர்தல் வெற்றிக்கு பலமான கட்சிகளுக்கிடையில் கூட்டணி என்பது மட்டுமல்ல, பரவலான செல்வாக்குகளைக் கொண்ட கட்சிகளுடனான் கூட்டணி என்பதுவும் அவசியமாகின்றன.

கூட்டணிகள் அமைவதிலும், கூட்டணிகளின் வெற்றியைத் தீர்மானிப்பதிலும் வெவ்வேறு முஸ்லீம் அரசியல் அணிகளும் முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றன. தமிழகத்தின் பிரதான நகரங்களிலும், கிழக்குக் கரை மாவட்டங்களிலும் முஸ்லிம் வாக்காளர்கள் நிர்ணய பாத்திரத்தை வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தீண்டத்தகாத இலங்கைப் பிரச்சினை

வழமை போல இத் தேர்தலிலும் மதச்சார்பு, சாதிப்பிரிவுகள், ஊழல்கள் ஆகியவையே முக்கிய விடயங்களாக அமைகின்றன. எல்லாக் கட்சிகளும், எல்லாக் கூட்டணிகளும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை எந்த இடத்திலும் வந்துவிடாமல் அடக்கி வைத்து விடுவதில் அக்கறையாகவே உள்ளன.

இந்திய தேச ஒற்றுமையின் பாதுகாவலர்களாக தம்மை மக்கள் மத்தியில் நிரூபிப்பதில் பகீரதப் பிரயத்தனம் எடுத்துக் கொள்வர். வை.கோ.வும், ராமதாசும் புலிகள் தொடர்பாக தமது வாய்களை இறுக்கி மூடிக் கொள்வார்கள், கலைஞர் சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க எடுக்கும் முயற்சியே புலிகளுக்கு அவர் ஆதரவானவர் அல்ல என்பதை நிரூபிப்பதற்கான முயற்சியின் ஒரு வடிவமே.

பத்மநாபா அவர்கள் படுகொலை செய்யப் பட்டதன் பின்னர் என்னென்ன விதமாகவெல்லாம் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை எடுத்தார் என்பதற்கான பட்டியல் பகிரங்கத்துக்கு வெளியிடப்படக்கூடும்.

புலிகளோடு உறவை வைத்திருப்பது ஒரு தேச விரோதச் செயலாகவும், புலிகளோடு ஒருவரைத் தொடர்புபடுத்திக் காட்டுவதன் மூலம் அவரைத் தோற்கடித்து விடலாம் எனக் கருதப்படவுமான ஓர் அரசியல் இலங்கையில் உள்ள சிங்களவர்கள் மத்தியில் மட்டுமல்ல, அது தமிழகம் உட்பட இந்தியா முழுவதிலும் காணப்படுகின்றமை இலங்கைத் தமிழர்களால் அவதானிக்கப்பட வேண்டிய ஒரு சிறப்பம்சமாகும்.

படிப்பகம்

# யூகோஸ்லாவியா

## பல்லின மக்களுக்கு இடையே அறுவைச் சிகிச்சை

(சென்ற இதழின் தொடர்ச்சி)

1943 நவம்பர் 3ம் திகதி போலாந்தின் Majdanek நகரில் உள்ள நாசிகளின் யூத அழிப்பு முகாமில் ஒரே நாளில் 17,000 யூதர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலையில் பங்கேற்ற கெஸ்டாப்போ (Gestapo) கொலையாளி Alfons Gotzfried அவன்தான் மட்டுமே தனியே அதே தினத்தில் 500 பேருக்கும் மேற்பட்ட நிராயுதபாணிகளான யூதர்களை தன்கையாலேயே சுட்டுக் கொன்றவன். இவனுக்கு கடந்த மே மாதம் ஜேர்மனியின் Stuttgart நீதி மன்றம் வழங்கிய தண்டனை வெறும் 10வருடங்கள். ஜேர்மனியின் மிகப் பெரும் வங்கியான Deuts Bank மேல் 32 மில்லியன் மார்க் நட்டயீடு கேட்டு பாதிக்கப்பட்ட யூத மக்களின் அமைப்புக்கள் வழக்குத் தொடர்ந்துள்ளதை பற்றிப் பேச ஆளில்லை.

ஜேர்மனியில் மட்டும் 42,000 புதிய நாசிகள் அமைப்புக்களைக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைத் தடைசெய்ய எந்த விசேட பயங்கரவாதச் சட்டமும் கிடையாது. ஆனால் ஜேர்மனியில் 100 பேருக்கும் குறைவான அங்கத்தவர்களை கொண்ட (RAF) செம்படை அமைப்பைத் தடை செய்யவும் வேட்டையாடவும் மட்டும் இன்றைய பாசிசம் பற்றிப் பேசும் கனவான்களுக்கு நேரமிருக்கிறது.

Ich binstolz ein Arier Zu sein (நான் ஒரு ஆரியனாய் இருப்பதையிட்டு பெருமைப் படுகிறேன்) "Sieg Heil" கோசங்கள் ஜேர்மன் தெருக்களில் ஒலிப்பதையிட்டு எந்தத் தேசியவாத மயிராண்டியும் கேள்வி எதுவும் கேட்டதில்லை. உட்சுவரை ஒருபோதும் தீற்றிக் காட்டியதில்லை.

கம்யூட்டரில் Internet இல் 60க்கு மேற்பட்ட நாசிக்குழுக்கள் பிரச்சாரம் செய்திப் பரிமாற்றம் செய்கிறார்கள். அது விரிந்து வளர்கிறது. அமெரிக்காவில் 40க்கு மேற்பட்ட நாசிகளின் இயக்கங்கள் இயங்குகின்றன. 30க்கு மேற்பட்ட KuKlux-Klan அமைப்புகளும் 42 வரையிலான ஆயுதம் கொண்ட பாசிசக் குழுக்களும் தம்மிடையே தொடர்புபட்டு இயங்குகின்றன.

ஜேர்மனிய புதிய நாசிகள் இவர்களோடு மட்டுமல்ல உலகம் முழுவதும் உள்ள சகல பாசிச சக்திகளோடும் உறவு கொண்டுள்ளனர். மேற்கு ஐரோப்பிய நாடுகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் பல பாசிசக் குழுக்கள் உள்ளன. ரஷ்யாவில் அக்டோபர் புரட்சிக்கு முன்பு இயங்கிய கறுப்பு நூற்றுவர் இயக்கம் மீண்டும் உயிர்பெற்று நாசிகளை தம் ஆசான்களாக அறிவித்துள்ளது. தென்னமெரிக்க நாடுகளில் பிறேசில், பரகுவே, ஆர்ஜன்டீனா, சிலி, உருகுவே, போன்ற இடங்களின் நாசிக்குழுக்கள் ஜேர்மனிய நாசிக்குழுக்களோடு உறவுள்ளவர்கள். இவர்கள் அங்கு யூதர்கள், கறுப்பின மக்களுக்கு எதிரான தாக்குதல் குண்டுவெடிப்புக்களை நடாத்தியுள்ளனர்.

ஆர்ஜென்டீனாவின் பாசிச அமைப்பான PNOSP – 6000 உறுப்பினர்களைக் கொண்டு பகிரங்கமாய் இயங்குகிறது. சிலியில் சர்வாதிகாரி பினாசெற் உடனும் இராணுவம் உளவுத்துறைகளுடனும் தொடர்பு இயங்கிய ஜேர்மனியில் இருந்து அங்கு குடியேறிய பாசிசக் கும்பலான Deutsthche – Colonia Digridad அங்கு கம்யூனிஸ்டுக் களையும் அரச எதிர்ப்பாளர்களையும் கொன்றது.

தென்னாபிரிக்காவின் பாசிச குழுக்கள் வெள்ளை இனவெறி அமைப்புக்கள் யாவும் பாசிசத்தின் தாய் மண்ணோடு தொடர்புடையனவே. இவைகளை எந்த ஜேர்மனி அரசியல்வாதியும் தேசிய வெறிக்கும் பாசிசத்துக்கும் முண்டுகொடுக்கும் SPD- பசுமைக் கட்சிக் கும்பலும் கண்டு கொதித்தெழுவது கிடையாது. இப்போ பாசிசத்தால் பலி கொள்ளப்பட்ட தேசத்தை அதன் சமூக சீரழிவின் பயனாய் எழும் தேசியத்தைச் சாட்டிக் கொண்டு பாசிசம் பற்றி புதிய விளக்கங்களை பாசிசத்தின் நண்பர்களே தருவது வரலாற்றின் வேடிக்கையாகும்.

பெருச்சாளியை விட்டு சுண்டெலியைப் பிடித்த கதையாக உலகப் பாசிஸ்டுகள் யூகோஸ்லாவிய மக்களை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தியுள்ளார்கள். 340 கொலை 740,000 கொசவோ அல்பானியர் களை குடியெழுப்பியமைக்காக சேர்பியர்களின் தலைவரான மிலசவிக்கை ஐ.நா வின் யுத்த குற்றவாளிகளை விசாரிக்கும் நீதிமன்றத்திற்கு கொண்டுவர வேண்டும் என்கிறார்கள். ஏகாதிபத்தியக் கொலையாளிகளே நீதிபதிகளாக மாறுகிறார்கள்.

இப்போ மிலேசவிக்கின் தலைக்கு 5 மில்லியன் டொலர்கள் விதிக்கப்பட்டுள்ளது. மில்லியன் கணக்கான மக்களின் அழிவின் சாக்குரலில் தம் ஏகாதிபத்திய வாழ்வை அமைத்துக் கொண்டோர் சுதந்திரம் ஜனநாயகம் மனித நீதி பற்றிப் இந்த உலகில் 828 மில்லியன் மக்களுக்கு வயிற்றுக்கு போதிய உணவில்லை. தினமும் 30,000 க்கு மேற்பட்ட குழந்தைகள் உணவும், மருந்தும் இல்லாமல் சாகிறார்கள். 300,000 குழந்தைகள் உலகம் முழுவதும் யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 900 மில்லியன் மக்களுக்கு எழுத படிக்கத் தெரியாது. 130 மில்லியன் பிள்ளைகளுக்கு பள்ளி செல்ல வழியில்லை. 200 மில்லியன் குழந்தைகள் இளம் வயதிலேயே தொழிலாளர்களாக உழைக்கிறார்கள். ஆபிரிக்காவில் அடுத்து 10 வருடங்களில் 1/5 பகுதி மக்கள் எயிட்ஸ் நோயால் சாகப் போகிறார்கள். இந்த மனித அவலத்தை, கொடுமைகளை பேச நாதியில்லை. இந்த அத்தனை கொடூரங்களின் சூத்திரதாரிகள் உலக ஒழுங்கை, மனித நியாயத்தை எம் செவிகளில் அறைகின்றார்கள். மக்கள் யாவுக்கும் பதிலளிப்பார்கள். இன்றைய ஆழ்ந்த பெருமூச்சுக்கள் நாளைய மனிதன் நீதி கோரும் அரசியல் பிரளயங்களின் முன்னறிவிப்பு ஆகும்.

**(பாரிசில் இருந்து வெளிவரும் எக்ஸில் (EXIL) 09வது சஞ்சிகையில் தமிழரசன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை இங்கு தொடராக பிரசுரிக்கப்பட்டது. (நன்றி) முற்றும்**

---

## மலையக மாணவர்களுக்காக தனியான பல்கலைகழகம் அமையுமானால் அது சமூக மாற்றத்தின் ஒரு அம்சமாகும்



இலங்கையில் மூவினங்கள் வாழும் மக்கள் சமூகத்தினர் வாழ்கின்ற போதிலும் கல்வியறிவில் குறிப்பாக ஏனைய இனத்தவர்களுடனும், சனத்தொகை வீதாசாரத்தின் அடிப்படையிலும் ஒப்பிடுகையில் மலையகத்தவர்களின் ஆரம்ப கல்விநிலை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப் படுகின்றது.

ஆசிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை ஒரு முன்னேற்றகரமான பாதையில் செல்கின்றது எனலாம். ஆயினும் 10லட்சம் இந்திய வம்சாவளி பெருந்தோட்ட மக்கள் தொகையில்

- **5-9 வயதுக்குட்பட்டோரில் 47 வீதமானோர் பாடசாலைக்குச் செல்வதில்லை.**
- **4 இலட்சம் பேருக்கு எழுத வாசிக்கத் தெரியாது.**
- **ஆண்கள் 21 வீதமும், பெண்கள் 37 வீதமும் ஆகும்.**

இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணிகள் பல இருக்கினறன.

- தொழிலாளர்களின் பொருளாதார நெருக்கடியானது சிறுவர், சிறுமியர் குடும்ப சுமையை பங்கேற்பதில் பங்காளியாகின்றர். இலவச கல்வி வழங்கபட்ட போதிலும் பெற்றோரின் குறைந்த வருமானமானது குடும்பத்தினரின் அன்றாட தேவைகளுக்கே பற்றாக்குறையாக இருப்பதால் மாணவர்களின் நுழைவுக் கட்டணம், வசதிக் கட்டணம், எழுதுகருவிகள், பரீட்சைக் கட்டணங்கள் போன்றவற்றிற்கு பெற்றோர்கள் செலவழிக்க முடியாத நிலை.
- பெற்றோரே ஆரம்ப கல்வியை கற்கத் தவறியமையால் தங்கள் பிள்ளைகளின் எதிர் காலம், கல்வியின் முக்கியத்துவம் பற்றியவிடயத்தில் போதிய தெளிவின்மை. பாடசாலைக்கு

குறிஞ்சிக் குமார்

தங்கள் பிள்ளைகளை அனுப்ப வேண்டிய பெற்றோர்கள் வருமானத்திற்காக தங்கள் பிள்ளைகளை நகரங்களில் உள்ள வீடுகளுக்கும், கடைகளில் சிப்பந்திகளாகவும் வேலைக்கு அமர்த்துகின்றனர்.

பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் எவ்வாறான கல்வி வளர்ச்சியினை அடைகின்றார்கள், எதில் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றார்கள். அவர்களின் ஒழுக்க நிலைமைகள் எப்படி என்பதெல்லாவற்றையும் பெற்றோர்கள் ஆசிரியர்களுடான தொடர்புகளினூடாகவே பெற்றுக்கொள்ளமுடியும். இவை தங்கள் பிள்ளைகளின் எதிர் காலம் பற்றிய விடயத்தில் பெற்றோர்கள் அக்கறை கொண்டு மேற்கொள்ள வேண்டிய முக்கிய பொறுப்புக்களாகும்.

- மலையகத்தில் முன்னரிலும் பார்க்க பாடசாலை கட்டிடங்கள் கணிசமான அளவு அதிகரித்திருக்கிற போதிலும் போதிய தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இல்லாமை காணப்படுகின்றது. குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறையானது க.பொ.த.ப (சா.த), க.பொ.த.ப. (உ.த) பரீட்சைகளில் பெருந்தோட்டப்புற மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெற முடிவதில்லை. அடிப்படையில் ஆரம்பக் கல்வியும், குறிப்பிட்ட தரத்திற்கு கல்விபயின்று வந்திருந்தாலும், உயர்தரப் பரீட்சைகளில் உயரிய சித்தியை அடைய முடியாததால் பல்கலைகழகத்துக்கான தெரிவில் மலையக மாணவர்கள் மிகக் குறைவாகவே இடம் பெறுகின்றனர்.

பெரும்பாலான பாடசாலைகளில் குறிப்பிட்ட தராதர வகுப்புக்களுக்கே ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதியின்மை, போக்குவரத்து வசதியின்மை. போன்ற குறைபாடுகளும் மாணவர்களின் நலனை பாதிக்கின்றன.

மலையகத்தின் சிறீபாத கல்வியியல் கல்லூரி மலையக மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டது என்று கூறிய போதிலும் எல்லா சமூகத்தவர்களும் பங்கெடுத்துக் கொள்கின்றனர். இதனால் ஒப்பீட்டுரீதியில் குறைந்த அளவு புள்ளிகளைப் பெறும் மலையக தோட்டப்புற மாணவர்கள் பெரும்பாலும் அனுமதி கிடைக்காமல் ஒதுக்கப்படுகின்றனர்.

எதிர் வரும் 10 வருடங்களில் மலையகத்துக்கான தனித்துவமான பல்கலைகழகம் உருவாக்கப்பட வேண்டும் என்று பேராசியரியர் சந்திரசேகரம் அவர்களும், மத்திய மாகாண கல்வி அமைச்சர் இராதாகிருஸ்ணன் அவர்களும் முயற்சிப்பது எமக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்த போதிலும், மலையக தோட்டப்புறத்தைச் சேர்ந்த குடும்பங்களின் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு தடையாகவுள்ள அடிப்படைக் காரணிகளை கண்டு களைவதினூடாகவுமே, பெரும்பான்மையான தமிழ் மலையகத் தொழிலாளர்களின் குடும்பங்களிலிருந்தும் போதி அளவு பட்டதாரிகள் உருவாகின்ற ஒரு நிலைமை ஏற்படும்.

Regd. in the Dept. of Posts of Sri Lanka under (Qd) QD / 41 / News / 2001
www.padippakam.com



# மங்கள சமரவீர

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவதென இழுக்கு" திருவள்ளுவர் திருவாக்கின் வழி. இலங்கை நகரப்புறங்களை அழகுப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்காக பல தடங்கல்களையும் பொருட்படுத்தாது திறமையாகப் பணிபுரியும் அமைச்சர் மங்கள சமரவீர போற்றப்படத்தக்கவரே. குறுகிய நோக்கத்துடன் சுயநலத்தை எதிர்பார்த்து நிற்கும் அரசியல்வாதிகளிடையே எதிர்பார்ப்புக்களுக்கு அஞ்சாது அவர் மக்கள் தொடர்பு அமைச்சராக இருந்தபோது சிங்கள இனவாதத்துக்கு எதிராக போராடியதை மறக்க முடியாது. அழகியற்கலைஞரான மங்கள சமரவீர இலங்கையின் நகரங்களை அழகுபடுத்துவதில் தன் திறமையைக் காட்டட்டும்.



# கமலஹாசன் தெனாலி படம்

தெனாலி திரைப்படத்தில் கமலஹாசன் புலி வேடம் கட்டி ஆடவில்லை என்று கவலை. சிலருக்கு இனப்பிரச்சினையை விளக்கும் படமாக அமையவில்லை என்று கவலை வேறு சிலருக்கு.. தெனாலி படத்தை ஹேராமின் இலங்கை வடிவமாகப் பார்க்க முற்படுவதனாலேயே இந்தக் குழப்பம். அஃது ஒருபுறமிருக்க,

தென்னாலிக்கு மட்டுந்தானா பயம்? தமிழர்களுக்கு? ஊரில்
இருக்கப்பயம், வெளிக்கிடப்பயம், கப்பலுக்குப் பயம்,
கப்பலில் வரும் அரிசிக்கும் பயம், ஆமிக்குப் பயம்,
ஊரிலே போதிக்கும் சாமிகளுக்குப் பயம், லைட் போடப் பயம்,
லைட் போஸ்ட்டுகளுக்குப் பயம், ஊரிலே படிக்கப் பயம்,
வெளிநாட்டுக்கு போகேக்கப் பயம், வெளிநாட்டில இருந்து
திரும்பவும் பயம், ஆயுதங்களை வைத்திருக்கப் பயம்,
அதுகளை வைத்திருக்கவையைக் கண்டாப் பயம்,
அவையின்ற கடிதத்துக்குப் பயம், சொந்தக்காரருக்குப் பயம்,
ஆதரவாய் இருக்கிறவையைக் காணவும் பயம்,
வேட்டுச் சத்தத்தைக் கேட்டாப் பயம்,
அதுகளக் கேக்க இல்லையெண்டாலும் பயம்
ஓட்டுக்களைக் கேக்கவும் பயம், அதுகளப் போடவும் பயம்,
நடிக்கவும் பயம், நிமிர்ந்து நடக்கவும் பயம்,
வல்வெட்டித்துறையானுக்குப் பயம்,
இப்ப ஊறாத்துறையானுக்கும் பயம்,
முந்தி றோட்டுச் சண்டியன்களுக்குப் பயம்
பிறகு ரகசிய நோட்டீஸ் சங்கிலியன்களுக்குப் பயம்,
இப்ப பல்கலைக்கழக வன்னியன்களுக்கும் பயம்,
அட நல்லூர்க் கந்தா!
உ(க)ந்தன் கருணைக்கு நாங்கள் எப்பவுமே பயம்.

# பதினான்காவது ஆண்டு நினைவு



1987ம் ஆண்டு மார்ச் மாதம் 30ந் திகதி, ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் புளொட்டின் முக்கியமான தலைவர்கள் உட்பட ஈழப் போராளிகள் அறுபது பேரளவில் புலிகளால் சிறையில் அடைத்து வைத்துப் படுகொலை செய்யப்பட்டார்கள். ஈழப் போராட்ட இயக்கங்களைத் தடை செய்து அதன்பேரில் பல நூற்றுக்கணக்கான போராளிகளைக் கைது செய்து புலிகள் தமது சிறைகளில் அடைத்து வைத்துக் கொடூரங்கள் புரிந்தனர். அவ்வாறு அடைத்து வைக்கப்பட்ட சிறைகளில் ஒன்று யாழ்ப்பாணம் கந்தர்மடத்திலுள்ள "கந்தன் கருணை" என்று பெயரிடப்பட்ட வீடு. இங்குதான் புலிகள் தங்களால் அடைத்து வைக்கப்பட்டிருந்த நிராயுதபாணிகளான போராளிகள் மீது தமது தானியங்கித் துவக்குகளால் குண்டுமழை பொழிந்து கொன்று குவித்தார்கள். இந்தக் கொடூரச் சம்பவம் நடந்து பதினான்கு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன.

படுகொலைகளுக்கு உள்ளான தோழர்களுக்கு எமது நினைவு அஞ்சலிகளைச் செலுத்துவோம்.



# சேர். டொன் பிரட்மென்

சேர் டொன் பிரட்மென் தனது 92 வயதில் காலமானார். 1928 முதல் 1948 வரை 52 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 29 சதங்களும் அதிலும் இரண்டு தடவை 300 ஓட்டங்களையும் நான்கு தடவை 200 ஓட்டங்களையும் பெற்று 99.94 எனும் ஓட்ட சராசரியை உலகம் வியக்கத்தக்க சாதனைகளைப் புரிந்துள்ளார். இதுவரை உலக டெஸ்ட் போட்டிகளில் ஒரே நாளில் 300 ஓட்டங்களைப் பெற்றவர் சேர் டொன் பிரட்மென் அவர்களே.

# ஏரியல் சரோன்



இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது லெபனானில் இரண்டு அகதிமுகாம்களில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்களின் படுகொலைகளின் சூத்திரதாரி இவர் புதிய பிரதமராக பதவியேற்றவுடன் பாலஸ்தீனப் பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்களும் மரணங்களும் அதிகரித்துள்ளன.

# சுசந்திகா



இலங்கையை ஒலிம்பிக்களவில் பெருமையடைய வைத்த ஓட்ட வீராங்கணை சுசந்திகா வரக்கப்பொல கிராமத்தில் இறப்பர் தோட்டத்தில் கூலி வேலை செய்த பெற்றோருக்கு பிறந்தவர். இப்போது அவருடைய வயது 25. 2000ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்ற முதலாவது இலங்கைப் பெண்மணியாவார். சுசந்திகாவின் இத் திறமைக்கு பரிசாக எமது ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா 50 இலட்சம் ரூபா பணப்பரிசும் பல புலமைப் பரிசுகளும் வழங்கியுள்ளார். இவ்வாறான ஊக்குவிப்பு நடவடிக்கை எதிர் காலத்தில் இலங்கையில் சுசந்திகா போன்ற பல வீரர்களை உருவாக்க வழி வகுக்கட்டும்.

# கருணாநிதி



அரசியல் களத்தில் அரை நூற்றாண்டுக்கு மேல் சளைக்காது செயற்பட்டு வரும் கலைஞர் தற்போது 77வயதைத் தாண்டியுள்ளார். நான்கு தடவைகள் தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பதவி வகித்தவர். ஏறத்தாழ 12 வருடங்களுக்கு மேலாக ஆட்சி செய்துள்ளார். அவருக்கு சர்க்கரை வியாதி, சிறுநீரகக் கோளாறு, இரத்த அழுத்தம், மூட்டு வியாதி எனப்பல. எதிர் வரும் சட்டசபைத் தேர்தலில் 150க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளவிருக்கின்றார். அரசியல் சாணக்கியம், பேச்சாற்றல், எழுத்தாற்றல் என பல துறைகளிலும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியவர். மிகக் கடும் உழைப்பாளியான கலைஞரின் சாதனைகளும், படைப்புக்களும் தமிழர்கள் வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள். இந்தத் தேர்தல் பிரச்சாரம்தான் தனது கடைசி தேர்தல் பிரச்சாரமென அவர் முன் கூறியிருக்கின்றமையைக் கேட்க அவரை நன்கு அறிந்த பலருக்கும் தொண்டை அடைப்பது நியாயமே. அவரது தப்புகள், தவறுகள், குற்றங்கள், குறைபாடுகளுக்கு அப்பால் அவர் புரிந்துள்ள சாதனைகள் பெரியவை. சிறுகுழிகளைக் தாண்டிய பக்கவாத்தியக்காரர்களைத் தலையில் தூக்கி வைத்து ஆடுகின்ற இன்றைய தமிழ்ச் சமுதாயத்தில், பல சமுத்திரங்களைத் தாண்டி முத்திரைகள் பல படைத்த பிரதான ஆட்டக்காரனான கலைஞர் தனிப்பட்ட கோபதாபங்களுக்கெல்லாம், அரசியல்ரீதியான வேறு பாடுகளுக்கப் பால் நிதானமாகக் கணிக்கப்படவேண்டியவர்.

தி. சிறீதரன் 144A, மன்னார் ரோட், குருமன்காடு, வவுனியா அவர்களால் [illegible] C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது
படிப்பகம்